වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
Annual Performance Report

2023

කම්කරු දෙපාර්තමේන්තුව
தொழில் திணைக்களம்
Department of Labour



2023 ஆம் ஆண்டுக்கான

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

செலவுத்தலைப்பு இலக்கம் 221

தொழில் திணைக்களம்

தயாரிப்பு
திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

வெளியீடு

August 2024

திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

10 ஆம் மாடி,“மெஹெவர பியச”
தொழில் திணைக்களம்
நாராஹேன்பிட்டி
கொழும்பு 05

அச்சிடப்பபட்டது:
அரசாங்க அச்சுத் திணைக்களம்

பக்கம்

உள்ளடக்கம்

முதலாம் அத்தியாயம் நிறுவனத் தோற்றப்பாடு/செயற்படுத்தல் சுருக்கம்		**1**
1.1	அறிமுகம்	2
1.2	நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்	2
1.3	பிரதான செயற்பாடுகள்	3
1.4	நிறுவனக் கட்டமைப்பு	4
1.5	திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்	6
1.6	திணைக்களத்தின் கீழுள்ள நிதியங்கள்	18
இரண்டாம் அத்தியாயம் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு		**19**
2.1	நிறுவனமயமாக்கப்பட்ட தொழில்துறை அமைதியைப் பாதுகாத்தல்	20
2.2	தொழில் தரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்	25
2.3	ஊழியர்களின் தொழில்சார் பாதுகாப்புக்காக கண்ணியமான பணிச்சூழலை உறுதிப்படுத்துதல்	27
2.4	ஊழியர்களின் தொழில்சார் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்	28
2.5	குழந்தைத் தொழிலாளர் முறையை மறுதலித்தல் மற்றும் தொழில் புரியும் பெண்கள் மற்றும் இளைஞர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்	30
2.6	ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பு	32
2.7	ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்குரிய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு	36
2.8	திணைக்களத்தின் மனித வள முகாமைத்துவம்	38
2.9	திணைக்களத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின்அபிவிருத்தி	40
2.10	தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள்	41
2.11	திணைக்களத்தின் பணிகளை மேற்பார்வை செய்வதன் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடத்துதல்	46
2.12	கண்ணியமான பணி நிகழ்ச்சித் திட்டம்	46
2.13	நிதி முகாமைத்துவம்	47
2.14	தொழில் திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான பிரதான எதிர்காலத் திட்டங்கள்	48
மூன்றாம் அத்தியாயம் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை		**50**
3.1	நிதிசார் செயலாற்றுகைக் கூற்று	51
3.2	நிதி நிலைமைக் கூற்று	52

3.3	நிதிப் பாய்ச்சல் கூற்று	54
3.4	நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	55
3.5	வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை	55
3.6	ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை	55
3.7	நி.ஒ.208 இன் பிரகாரம், இதர அமைச்சுகள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு அளிக்கப்பட்ட ஏற்பாடுகள்	56
3.8	நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை	57
3.9	கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை	58
நான்காம் அத்தியாயம் செயலாற்றுகைச் சுட்டிகள்		**69**
4.1	நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)	70
ஐந்தாம் அத்தியாயம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை		**71**
5.1	இனங்காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்	72
5.2	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகளும் சவால்களும்	73
ஆறாம் அத்தியாயம் மனிதவள தோற்றப்பாடு		**77**
6.1	மனிதவள முகாமைத்துவம்	78
6.2	நிறுவனத்தின் செயலாற்றுகையின் மீது மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியுள்ள விதம்	78
6.3	மனிதவள அபிவிருத்தி	78
ஏழாம் அத்தியாயம் இணக்க அறிக்கை		**93**
7.1	இணக்க அறிக்கை	94

வரைபடங்கள்

		பக்கம்
வரைபடம் 2.1	2019 ஆம் ஆண்டு முதல் 2023.12.31 வரை, நியதிச்சட்ட உரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்தல் மற்றும் தீர்க்கப்படுதல்	23
வரைபடம் 2.2	2019 ஆம் ஆண்டு முதல் 2023.12.31 வரை, தொழில் பிணக்குகள்குறித்த முறைப்பாடுகள் கிடைத்தல் மற்றும் தீர்க்கப்படுதல்	23
வரைபடம் 2.3	2023.01.01 முதல்2023.12.31வரை ஊழியர் சேமலாப நிதி அனுகூலங்களை செலுத்துவதற்காக அனுப்பப்பட்ட தீர்மானக் கடிதங்களின் எண்ணிக்கை	33
வரைபடம் 2.4	2023.01.01 இலிருந்து 2023.12.31 வரை நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிகை	38

அட்டவணைகள்

		பக்கம்
அட்டவணை 2.1	2023.01.01முதல் 2023.12.31வரை நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்	20
அட்டவணை 2.2	வேலை நிறுத்தங்கள் தொடர்பில் பதிவாகிய தரவுகள் - 2023.01.01 முதல் 2023.12.31 வரை	24
அட்டவணை 2.3	நீதிமன்ற வாரியான வழக்குகளின் செயலாற்றுகை - 2023.01.01 முதல் 2023.12.31 வரை	36
அட்டவணை 2.4	அலுவலர் ஆட்சேர்ப்பு 2023	38
அட்டவணை 2.5	வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் நடத்தப்படுதல் 2023	39
அட்டவணை 2.6	உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி 2023	40
அட்டவணை 2.7	கண்ணியமான பணி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் - 2023	47
அட்டவணை 2.8	திணைக்களத்தின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம் - 2023.12.31ஆம் திகதியில்	47
அட்டவணை 6.1	உள்நாட்டு பயிற்சிப் பாடநெறிகளில் பங்கேற்பு - 2023	80
அட்டவணை 6.2	வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளில் பங்கேற்பு - 2023	91

படங்கள்

		பக்கம்
படம் 2.1	சோதனைகளை நடத்துதல் - 2023.01.01 முதல் 2023.12.31 வரைமுன்னேற்றம்	22
படம் 2.2	2023.01.01 முதல் 2023.12.31 வரையிலான காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்	27
படம் 2.3	2023.01.01 முதல் 2023.12.31 வரையிலான காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்	28
படம் 2.4	2023.01.01 முதல் 2023.12.31 வரையிலான காலப்பகுதியில், பல்வேறு நிறுவனங்களில் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	29
படம் 2.5	2023.01.01 முதல் 2023.12.31 வரை அறிவித்தல்கள் அனுப்பப்படுவதன் முன்னேற்றம்	34

புகைப்படங்கள்

		பக்கம்
புகைப்படம் 2.1	சமூக உரையாடலை மேம்படுத்துவதற்காக 2023 இல் நடத்தப்பட்டசில நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள்	22
புகைப்படம் 2.2	குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புக் கருத்திட்டம் (நுவரெலியா மாவட்ட நிகழ்ச்சித் திட்டம்) - 2023.09.21	32
புகைப்படம் 2.3	குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்புக்கருத்திட்டம் (மொனராகலை மாவட்ட நிகழ்ச்சித் திட்டம்) - 2023.09.20	32
புகைப்படம் 2.4	மாத்தளை நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் - 2023.05.17 மற்றும் 18	36
புகைப்படம் 2.5	யாழ்ப்பாணம் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டம் - 2023.06.15 மற்றும் 16	36

முதலாம் அத்தியாயம்

நிறுவன தோற்றப்பாடு/செயற்படுத்தல் சுருக்கம்

நிறுவன தோற்றப்பாடு / செயல்படுத்தல் சுருக்கம்

1.1 அறிமுகம்

இலங்கையில் தனியார் துறை மற்றும் பகுதியளவான அரச துறை ஊழியர்களின் உரிமைகளை தொழில் சட்டங்களின் மூலம் உறுதிப்படுத்துவது தொழில் திணைக்களத்தின் பிரதான பணிப் பொறுப்பாகும். 2023 ஆம் ஆண்டில், இப் பணிப்பொறுப்பினை சிறந்த முறையில் ஈடேற்றி, தொழில்தருநர்- தொழிலாளர் உறவினை மேம்படுத்துவதன் ஊடாக நிறுவன மட்டத்தில் தொழில்துறை அமைதியைப் பாதுகாப்பதற்கும் தொழில்தருநர்களின் ஆதரவுடன் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் திணைக்களம் முன்னுரிமை அளித்து நடவடிக்கைகளை மேற்கொண்டது.

மேலும், முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக மிகவும் சாதகமான சூழலை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க, பல தசாப்தங்கள் பழமையானதும் சிக்கலானதுமான தொழில் சட்டங்களுக்குப் பதிலாக எளிமையானதும் தொழில்தருநர் – தொழிலாளர் உறவினை மேம்படுத்துவதற்கு பங்களிக்கின்றதுமான புதிய தொழில் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தொழில் திணைக்களம் 2023 இல் அடிப்படை பணிகளை மேற்கொண்டது.

1.2 நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

நோக்கு

"சர்வதேச ரீதியில் போட்டிமிகு பொருளாதாரத்தின் நிமித்தம் நீடித்த தொழிற்துறை அமைதிகொண்ட நாடு."

செயற்பணி

"தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, உறுதிப்படுத்தப்பட்ட தொழிற்துறை அமைதியுடன் கூடிய கண்ணியமான பணிச் சூழலின் ஊடாக இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு நல்குகதல்."

நோக்கங்கள்

- தனியார் மற்றும் பகுதியளவு அரச துறையிலுள்ள சேவை நிறுவனங்களில் நிலையான தொழிற்துறை அமைதியை உறுதிப்படுத்துதல்.
- கண்ணியமான பணிச்சூழலை உருவாக்குதல் மற்றும் தொழில் நியமங்களை உருவாக்குவதன் மூலம் ஊழியர்களின் சேவை அந்தஸ்தினை மேம்படுத்துதல்.
- ஊழியர்களின் சமூக பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.
- பெண்கள் மற்றும் இளம் ஆட்களின் தொழில்சார் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.
- ஊழியர்களின் சுகாதார நிலைமைகளுக்கு சாதகமானதும் ஆபத்துக்கள் இல்லாததுமான பணிச்சூழலை உருவாக்குதல்.

1.3 பிரதான பணிகள்

- சமூக உரையாடலை ஊக்குவிப்பதன் மூலம் நிறுவன மட்டத்தில் தொழில்தருநர்-தொழிலாளர் உறவினை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்
- தொழில் சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்
- தீர்த்தல், கூட்டு ஒப்பந்தங்கள் மற்றும் நடுத்தீர்ப்பு மூலம் தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்
- ஊழியர் சேமலாப நிதியத்தின் மூலம் ஊழியர்களின் சமூக பாதுகாப்புக்காக நடவடிக்கை எடுத்தல்
- தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்
- குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் தொழில் புரியும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்
- சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகளை வலுப்படுத்துவதன் மூலம் தொழில் தரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்

1.4 திணைக்களத்தின் கட்டமைப்பு, அமைப்பு விளக்கப்படம், பிரதான பிரிவுகள் மற்றும் மொத்த பணியாள்தொகுதி

1.4.1 திணைக்களத்தின் கட்டமைப்பு



1.4.2 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

✓ தொழில் உறவுகள் பிரிவு	✓ ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு
✓ மனித வள அபிவிருத்திப் பிரிவு	✓ சட்ட அமுலாக்கப் பிரிவு
✓ விசேட புலனாய்வுப் பிரிவு	✓ நிர்வாகப் பிரிவு
✓ தொழில் தரப் பிரிவு	✓ நிதிப் பிரிவு
✓ கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு	✓ திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு
✓ தொழில் சுகாதாரப் பிரிவு	✓ புள்ளிவிபரப் பிரிவு
✓ பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு	✓ உள்ளக கணக்காய்வுப் பிரிவு

1.4.4 திணைக்களத்தின் அமைப்பு விளக்கப்படம்



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

அதன் பிரகாரம் தொழில் திணைக்களத்தின் தலைமையகத்துடன் இணைந்ததாக பின்வரும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1.5.1. தொழில் உறவுகள் பிரிவு

1.5.2. மனித வள அபிவிருத்திப் பிரிவு

1.5.3. விசேட புலனாய்வுப் பிரிவு

1.5.4. தொழில் தரப் பிரிவு

1.5.5. கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு

1.5.6. தொழில் சுகாதாரப் பிரிவு

1.5.7. பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு

1.5.8. ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

1.5.9. சட்ட அமுலாக்கப் பிரிவு

1.5.10. நிர்வாகப் பிரிவு

1.5.11. நிதிப் பிரிவு

1.5.12. திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

1.5.13 புள்ளிவிபரப் பிரிவு

1.5.14. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இதேவேளை, நாடு தழுவிய ரீதியில் காணப்படுகின்ற தொழிலாளர் சமுதாயத்தினருக்கு எதிர்பார்க்கப்படும் சேவை வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 11 வலயத் தொழில் அலுவலகங்களும், 40 மாவட்டத் தொழில் அலுவலகங்களும், 17 உப தொழில் அலுவலகங்களும், 10 மாவட்ட கைத்தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்களும் தொழில் திணைக்களத்தின் செயற்பாடுகளை பன்முகப்படுத்துவதன் கீழ் நாடு தழுவிய ரீதியில் நிறுவப்பட்டு சேவைகள் வழங்கப்படுகின்றன.

மேற்படி ஒவ்வொரு பிரிவிற்குமான செயற்பாடுகள் பின்வருமாறு அமைகின்றன.

1.5.1. தொழில் உறவுகள் பிரிவு

தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்து நாட்டில் தொழில்துறை அமைதியை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்பு நல்கும் பொறுப்பினை தொழில் உறவுகள் பிரிவு ஏற்றுள்ளது. இதற்காக தொழில் உறவுகள் பிரிவின் கீழ் தொழில் முடிவுறுத்தல் பிரிவு மற்றும் தொழிற்சங்கப் பிரிவு இயங்கி வருவதோடு தொழில் நீதிமன்றத்தின் இணைப்பாக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன்படி, பொருளாதார ஆக்கவிளைவினை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில்துறை அமைதியை ஏற்படுத்துதல், தொழில் சட்டங்களின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவை நிபந்தனைகள் மற்றும் சேவை நிலைமைகளைப் பாதுகாத்தல், கூட்டு ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல் மற்றும் மேம்படுத்துதல், வேலை பகிஷ்கரிப்புகள் மற்றும் தொழில் பிணக்குகளைக் குறைத்தல் மற்றும் தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் என்பன இப்பிரிவின் பிரதான நோக்கங்களாகும்.

இப்பிரிவினால் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன.

- 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க தொழில் பிணக்குகள்கட்டளைச் சட்டம்
- 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்துதல் சட்டம்
- 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டம்
- 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டம்

1.5.2. மனித வள அபிவிருத்திப் பிரிவு

நாடு தழுவிய ரீதியில் பரந்து காணப்படுகின்ற பகுதியளவு அரச நிறுவனங்களினதும் தனியார் துறை நிறுவனங்களினதும் உச்ச மட்ட ஆக்கவிளைவினையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்காக இரு தரப்புகளுக்கு மத்தியில் தொழில்துறை அமைதி உறுதிபடுத்தப்படுகின்ற பணிச் சூழலை உருவாக்குவதன் செயன்முறையை நிறைவேற்றுவது மனித வள அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் இப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.5.2.1. சமூக கலந்துரையாடலை மேம்படுத்துவதற்கான கொள்கைகளையும் உபாய மார்க்கங்களையும் அறிமுகம் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மூலம் நிறுவன மட்டத்தில் வேலைத்தள ஆதரவினைக் கட்டியெழுப்புதல்.

1.5.2.2. கூட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்காக வசதி வழங்குநராக செயற்பட்டு தொழில்துறை அமைதியை உருவாக்குதல்.

1.5.2.3. ஆரோக்கியமான பணிச் சூழலை உருவாக்குவதற்காக பகுதியளவு அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரையும் தொழில் சட்டங்கள் தொடர்பாக அறிவூட்டுதல் (இதற்காக நிறுவன மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முகாமையாளர்களுக்கும் முதலாளிமார்களுக்குமான நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும்.)

1.5.2.4 தொழில்தருநர் - தொழிலாளர் ஆகிய இரு தரப்பினதும் தொழில் திணைக்களத்தினதும் பங்கேற்புடன் பிராந்திய தொழில் அலுவலகங்கள் மூலம் முத்தரப்பு உறவை உருவாக்குதல், கொள்கை உருவாக்கத்திற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுதல், அறிவைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் தொழில்தருநர் - தொழிலாளர் ஆகிய இரு தரப்பினர்களுக்கு இடையில் தொழில் சட்டங்கள் தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்காக வலய.்.மாவட்ட ஆலோசனைச்சபைகள் மற்றும் சமூக மேடை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

1.5.2.5. தொழில் பிணக்குகள் ஏற்படுவதைத் தடுப்பதன் பொருட்டு அறிவு விருத்தியை ஏற்படுத்துவதற்கு உரையாடல் சஞ்சிகையை வெளியிடுதல்.

1.5.3. விசேட புலனாய்வுப் பிரிவு

மாவட்ட தொழில் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் தொழில் பரிசோதனைகளினால் அரவணைக்கப்படாத ஒரு முறைப்பாடு மற்றும் கோரிக்கைகள் தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில், அந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை விசேட புலனாய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.

ஏதேனுமொரு முறைப்பாடு பற்றிய விசாரணை அல்லது புலனாய்வு விசேட புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென தொழில் ஆணையாளர் நாயகம் தீர்மானிக்கும் சந்தர்ப்பங்களில், அத்தகைய விசாரணை இந்தப் பிரிவால் நடத்தப்படும்.

ஒரு தொழில் அலுவலகத்தில் முறைப்பாடு விசாரிக்கப்பட்ட அல்லது விசாரிக்கப்படும் விதத்தில் திருப்தியடையாத ஓர் ஊழியர் அல்லது தொழில்தருநர் (முதலாளி), முறைப்பாட்டை மறுபரிசீலனை செய்வதற்கான கோரிக்கையை விசேட புலனாய்வுப் பிரிவில் சமர்ப்பிக்கலாம்.

தொழில் ஆணையாளர் நாயகத்தின் கட்டளையின்படி, இலங்கையில் தொழில்தருநர்-தொழிலாளர் உறவு காணப்படும் எந்தவொரு இடத்திலும் தொழில் விசாரணையை நடத்த விசேட புலனாய்வுப் பிரிவுக்கு அதிகாரம் உள்ளது.

1.5.4. தொழில் தரப் பிரிவு

தனியார் துறை ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் மீது தாக்கம் ஏற்படுத்துகின்ற சம்பளம், சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான தரநியமங்களைத் தயாரித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் அவற்றுக்கு சட்ட அந்தஸ்தினை வழங்குதல் திணைக்களத்தின் ஒருபிரதான செயற்பாடாகும். சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகளுக்குரியதாக எழுகின்ற சிக்கல் நிலைமைகளைத் தீர்ப்பதன் பொருட்டு அது சம்பந்தமான தெளிவுபடுத்தல்களை வழங்குவதும் தர நியமங்களை நடைமுறைப்படுத்துவதிலான முன்னேற்றம் மற்றும் மேற்பார்வைப் பணியினை நிறைவேற்றுவதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் இச் செயன்முறையின் இன்றியமையாத ஒரு பகுதி என்பதோடு ஒட்டுமொத்த பொறுப்பினை நிறைவேற்றுவது திணைக்களத்தின் தொழில் தரப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இப்பிரிவின் மூலம் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன.

- 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
- 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் (சேவை மற்றும் சம்பளம் முறைசார்படுத்தல்) சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஊழியர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம்
- 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டம்
- 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஊழியர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம்.

1.5.5. கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு

கைத்தொழிற்சாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு பௌதீக ரீதியில் ஏதேனும் உடல்ரீதியான சேதங்கள் ஏற்படுதல், மின்சாரம், வெப்பம், காற்றமுத்தம், அதிக ஒளி மற்றும் இரைச்சல் என்பன மூலம் உடல்ரீதியான சேதங்கள் ஏற்படுவதற்கான அல்லது மரணங்கள்கூட சம்பவிப்பதற்கான அச்சுறுத்தல் உள்ளது. எனவே, விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைப்பது தொழில் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாகும். இலங்கையில் கைத்தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பல் தொடர்பான பிரதான சட்டரீதியான சாதனம் 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலை கட்டளைச்சட்டம் மற்றும் அதற்கு அமைவாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் என்பனவாகும். ஆபத்துக்களற்ற பணிச் சூழலை உருவாக்குவதன் மூலம் ஆபத்துத் தொடர்பான அச்சமின்றி பணியாற்றக்கூடிய பாதுகாப்பான ஊழியர் படையணியை உருவாக்குவதன் ஊடாக பணியிடங்களில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் அதன்மூலம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கும்

தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கப்படுகின்ற பங்களிப்பினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒட்டுமொத்த இலங்கையும் உள்வாங்கப்படுகின்ற வகையில் மாவட்ட கைத்தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்கள் 10 இல் சேவையில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர்களினால் கைத்தொழிற்சாலைகள் பரிசோதிக்கப்பட்டு இப்பணி நிறைவேற்றப்படுவதோடு தொழில் அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் பரிசோதனைகளின் போது இனங்காணப்படுகின்ற ஆபத்து நிலைமைகள் மாவட்ட கைத்தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படுவதனால் அத் தகவல்களும் பயன்படுத்தப்பட்டு ஊழியர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

அடிப்படையில் தொழில்சார் பாதுகாப்பினை வழங்குவதற்காக பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

1.5.5.1 புதிய கைத்தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல்

1.5.5.2 கட்டிட வரைபடங்களைப் பரிசோதித்தல் மற்றும் அங்கீகரித்தல்

1.5.5.3 கைத்தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல்

1.5.5.4 ஆபத்துக்களை புலனாய்வு செய்தல் மற்றும் அபாயகரமான சம்பவங்களை புலனாய்வு செய்தல்

1.5.5.5 சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

1.5.5.6 அதிக ஆபத்துடன்கூடிய இயந்திர சாதனங்களுக்கான பரிசோதனையை ஒழுங்குபடுத்துதல்

1.5.5.7 முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

1.5.5.8 விழிப்பூட்டல் செயலமர்வுகளை நடாத்துதல்

1.5.5.9 தொழில்சார் விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்கு இலக்காவோரை தொழில் நட்டஈட்டு ஆணையாளர் மற்றும் சிரம வாசனா நிதியத்திற்கு ஆற்றுப்படுத்துதல்

1.5.5.10 ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

1.5.5.11 தொழில் திணைக்களத்தினதும் அமைச்சினதும் பொறியியல் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

1.5.6. தொழில் சுகாதாரப் பிரிவு

நடைமுறையிலுள்ள கைத்தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களின் சுகாதார நிலைமை பாதுகாக்கப்படுகின்ற வகையில் பணியிடச் சூழலை உருவாக்குவது தொழில் தருநரின் கட்டாயமான பொறுப்பாக அமைவதோடு பாதுகாப்பான பணிச்சூழலில் சேவையாற்றுவதற்காக உள்ள உரிமை ஊழியர்களின் அடிப்படை உரிமையாகும்.

தொழிலில் ஈடுபடும்போது பணியிடச் சூழலில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக ஊழியர்கள் நோய் நிலைமைகளுக்கு உள்ளாவதற்கான அச்சுறுத்தல் மற்றும் திடீர் விபத்துகளுக்கு உள்ளாகுதல் என்பனவற்றைத் தடுப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய உயர்மட்ட உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக நலனோம்பலுடன்கூடிய சூழலொன்றை பணியிடத்தில் ஏற்படுத்த வேண்டும். அதற்குத் தேவையான கல்வியறிவை வழங்குவதும் சேவை நிலையத்தில் உள்ள நிலைமைகளை பரிசோதனைக்கு உட்படுத்துவதும் தொழில் சுகாதாரப் பிரிவின் தொழிற்பாட்டுச் செயன்முறையாகும்.

அடிப்படையில் பணிச்சூழலின் சில பலவீனங்களின் காரணமாக உடனடியாக அல்லது நீண்டகால ரீதியில் ஊழியர்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பாக விஞ்ஞானரீதியான முறையியல்களின் கீழ் கண்டறிதல், அதன்மூலம் ஏற்படக்கூடிய சுகாதார சிக்கல்களை அளவுசார் மற்றும் தரம் சார் ரீதியில் அளவிடுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான முறையியல்களின் கீழ் மேற்கொள்ளல், மேற்படி விபத்துக்களைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் தடுப்பதன் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்பூட்டுதல்என்பன நடைமுறை ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

அடிப்படையில் தொழில் சுகாதாரப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.5.6.1 பணியிடங்களில் காணப்படுகின்ற சுகாதாரப் பாதுகாப்பினை பரிசோதித்தல்

1.5.6.2 பணியிடங்களில் காணப்படுகின்ற சுகாதாரப் பாதுகாப்பினை பேணுவதற்குத் தேவையான அறிவினை வழங்குதல்

1.5.6.3 மருத்துவச் சபை தீர்மானங்களை வழங்குதல்

1.5.6.4 தொழில் சுகாதார விடயங்களின் அடிப்படையில் நட்டஈடு கோருகின்ற நபர்கள் தொடர்பாகவும் நோய் நிலைமை ஏற்படுதல் மற்றும் பணியிடத்தின் நிலைமைகள் தொடர்பாகவும் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தல்.

1.5.6.5 ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து நிதி கோருகின்ற, சேவையாற்றுவதற்கு முடியாத வகையில் நோய் வாய்ப்பட்டுள்ள தொழிலாளர்களின் நோய் நிலைமைகளை மதிப்பிடுதல்.

1.5.7. பெண்கள்மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு

இலங்கையின் உழைப்பாளர் படையில் பெண்களின் பங்களிப்பினை மேம்படுத்துதல் மற்றும் சிறுவர் தொழிலாளர் முறையை முழுமையாக இல்லாதொழித்தல் இலங்கை அரசாங்கத்தின் இன்றியமையாத ஒரு பொறுப்பாக காணப்படுவதுடன் இந்தப் பொறுப்பானது பெண்கள்மற்றும்

சிறுவர் அலுவல்கள் பற்றிய பிரிவின் பணிகளில் அடிப்படையான இருவகைப் பொறுப்புக்களாக அமைந்துள்ளது.

அதன் பிரகாரம், வேலைத்தளத்தில் பெண்கள் உள்வாங்கப்படுகின்ற தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், குறித்த சட்டங்களை காலத்திற்கேற்ப மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை விதப்புரை செய்வதன்மூலம் ஆக்கவிளைவுடன் கூடிய பெண்களின் உழைப்புப் பங்களிப்பினை நாட்டுக்கு பெற்றுக்கொடுப்பது இப்பிரிவின் முதன்மையான ஒரு பொறுப்பாகும்.

அதேவேளை, அனைத்துத் தரப்பினர்களினதும் பங்களிப்புடன் சிறுவர் தொழிலாளர் முறையை இல்லாதொழித்தல், 18 வயதுக்குக் குறைந்த நபர்களுக்கான தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நடைமுறையிலுள்ள சட்டத்தினைத் திருத்தி இன்றைய சமூகப் பிரச்சினைகளுக்கு ஏற்ற வகையில் நடைமுறையில் உள்ள சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை விதப்புரை செய்தல் இப்பிரிவின் முதன்மையான பொறுப்பாகும்.

அதன் பிரகாரம் இப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

1.5.7.1 தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் மற்றும் இளம் ஆட்கள் தொடர்பில் ஏற்புடையதாக அமைகின்ற சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்காக வலய மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களை நெறிப்படுத்துதல்.

1.5.7.2 பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நாடு தழுவிய ரீதியில் நடாத்துதல்.

1.5.7.3 தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்புடையதாக அமைகின்ற சட்டங்களைப் பயின்று பலவீனங்களையும் குறைபாடுகளையும் இனங்கண்டு சட்டத்தினை வலுப்படுத்துவதற்காக விதப்புரைகளை முன்வைத்தல்.

1.5.7.4 தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச ஆகிய மட்டங்களில் நடத்தப்படுகின்ற சிறுவர் அபிவிருத்திக் குழுக்களின்போது பயனுள்ள பங்களிப்பினை வழங்குதல்.

1.5.7.5 தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களுக்காக சுதந்திர வர்த்தக வலயங்களில் நிறுவப்பட்டுள்ள தொழில் திணைக்களத்திற்குரிய பெண்கள் விடுதிகளை பராமரித்தல்.

அதேவேளை, இப்பிரிவினால் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன.

- 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் சிறுவர்களையும் தொழிலுக்கமர்தல் சட்டம்
- 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேறு உதவி கட்டளைச்சட்டம்

1.5.8. ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

இலங்கையின் தனியார் துறை மற்றும் பகுதியளவு அரச துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஆரோக்கியமான பொருளாதார நிலைமையுடன்கூடிய இளைப்பாறல் வாழ்க்கைக் காலத்தை பெற்றுக்கொடுக்கும் அடிப்படை நோக்கத்தை முதலாகக் கொண்டு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்திற்கான நிர்வாகம் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு அதன் நிதி முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இடைக்கிடை திருத்தப்பட்ட இச் சட்டத்தின்கீழ் இன்றளவில் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் பின்வருமாறு அமைகின்றன.

1.5.8.1 ஊழியர் சேமலாப நிதியத்திற்காக தொழில்தருநர்களைப் பதிவு செய்தல்

1.5.8.2 ஊழியர் சேமலாப நிதியத்திற்காக அங்கத்தவர்களைப் பதிவுசெய்தல்

1.5.8.3 பங்களிப்புத் தொகை செலுத்தாத தொழில்தருநர்களிடமிருந்து பங்களிப்புத் தொகைகளை அறவிடுதல்.

1.5.8.4 அங்கத்தவர்களுக்கு மீழளிப்பு தொகைகளை செலுத்துவதற்கு செலுத்தல் கட்டளைகளை வழங்குதல்.

1.5.8.5 உறுப்பினரின் ஊழியர் சேமலாப நிதியை பிணையாக வைத்து சம்பந்தப்பட்ட வங்கிகளில் வீடமைப்பு நோக்கங்களுக்காக கடன் பெற்றுக்கொள்ள முன்வைக்கப்படும் கோரிக்கைகளை பரிந்துரை செய்தல்.

1.5.8.6 பாதுகாப்பு உரிமம் பெற தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களுக்கு அனுமதி அறிக்கைகளை வழங்குதல்.

1.5.8.7 வீட்டுப் பணி அல்லது மருத்துவ சிகிச்சை பணிகளுக்காக உறுப்பினரின் கணக்கு நிலுவையில் 30% வரை செலுத்துதல்

1.5.8.8 அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதிக்கான மேற்பார்வை.

1.5.9. சட்ட அமுலாக்கப் பிரிவு

தொழில் சட்டங்களை நாடு தழுவிய ரீதியில் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தொழில்துறை அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தொழில் திணைக்களத்தின் சட்ட அமுலாக்கப் பிரிவு இயங்கி வருகின்றது. அதன் பிரகாரம் தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்ட ஏற்பாடுகள் நாடு தழுவிய ரீதியில் ஒரே வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அச் சட்டங்களை மீறுகின்றவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும் அதன்மூலம்

தொழில்தருநர் தொழிலாளர் உரிமைகளை பாதுகாத்து தொழில்தருநர் தொழிலாளர் ஒத்துழைப்பினை மேம்படுத்துவதும் திணைக்களத்தின் சட்ட அமுலாக்கப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் பிரகாரம் சட்ட அமுலாக்கப் பிரிவின் பிரதான செயற்பாடுகளை பின்வரும் வகையில் எடுத்துக் காட்ட முடியும்.

1.5.9.1 நியதிச்சட்ட தொழில் சட்டங்கள் மீறப்படும்போது அதற்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் குறிப்பிட்ட வழக்குகளை நெறிப்படுத்துதல்.

1.5.9.2 வணிக மேல் நீதிமன்றத்தில், மாகாண மேல் நீதிமன்றத்தில், மேல் நீதிமன்றத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்லது உயர் நீதிமன்றத்தில் தொழில் திணைக்களத்திற்கு எதிராக அல்லது தொழில் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் போது அவ்வழக்கு நடவடிக்கைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவசியமான இணைப்பாக்கத்தினைப் பேணுதல்.

1.5.9.3 வலய அலுவலகங்களின் கண்காணிப்பின் கீழ் மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நீதித்துறைசார் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் நீதித்துறைசார் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைப் பரிசோதித்தல்.

1.5.9.4 வலயத்திலுள்ள மாவட்ட/உபதொழில் அலுவலகங்களில் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டிய சந்தர்ப்பங்களில் மற்றும் செயலிழந்துள்ள வழக்குகளை செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவரும் செயல்முறையின் போது தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் திணைக்களம் சார்பாக வழக்குகளை நெறிப்படுத்துதல் வலய அலுவலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள சட்ட அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.5.10. நிர்வாகப் பிரிவு

நிர்வாகப் பிரிவானது 04 கிளைகளைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன, நிர்வாகக் கிளை, தாபனக் கிளை, கட்டிட பராமரிப்பு அலகு மற்றும் நூலகம் ஆகும்.

இவற்றுக்கு மத்தியில் நிர்வாகக் கிளையின் மூலம் திணைக்களத்திற்கான சேவைகள் மற்றும் வழங்கல்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்கீழ்

திணைக்களத்தின் கட்டிட நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான காணிகளை இனங்காணுதல் மற்றும் அவற்றை கையகப்படுத்தல், கட்டிட நிர்மாணப் பணிகளை நெறிப்படுத்துதல், கட்டிடங்களுக்கான புனரமைப்பு மற்றும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல், தேவைக்கேற்ப கட்டிடங்களை வாடகைக்குப் பெறல்,திணைக்களத்தின் வாகன நிர்வாகம், திணைக்களத்தின் பிரிவுகளுக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்,மூலதன பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான முகாமைத்துவம், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், விடுமுறைநாள் சம்பளம், அக்கிரஹார காப்புறுதி மற்றும் இடருதவிக் கடன் அங்கீகரிக்கப்படுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தாபனக் கிளையின் மூலம் திணைக்களத்தின் பதவியணியின் தேவைகள் இனங்காணப்படுதல், தேவையின் பிரகாரம் ஆட்சேர்ப்புத் தொடர்பான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல், உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள், வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் நடாத்தப்படுதல்,செயலாற்றுகை மதிப்பீடு, சம்பள ஏற்றங்கள் வழங்கப்படுதல், இடமாற்றங்கள், உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறச் செய்யப்படுதல், உத்தியோகத்தர்களின் விடுமுறை நடவடிக்கைகள் மற்றும் பதவியணியின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கட்டிட பராமரிப்பு அலகு ஆனது திணைக்களத்தின் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் கட்டிடங்களை புனரமைப்பதற்கும் மேம்படுத்துவதற்குமுரிய நடவடிக்கைகளுக்கான வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகளையும் பெறுகைத் திட்டத்தையும் தயாரிப்பதற்காக ஆதரவளித்தல், கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பில் கட்டிடத் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களுடன் இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கட்டிட புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கான மேற்பார்வை, திணைக்களத்திற்கான தலைமையகத்தினதும் பிராந்திய அலுவலகங்களினதும் அனைத்து பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் தொடர்பாக செயற்படுகின்றது.

தொழில்திணைக்களத்தின் நூலகம் ஆனது தொழில்துறை தொடர்பான சட்டங்கள்,புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பில் இலங்கையில் காணப்படுகின்ற முதன்மையான நூலகமாகும். இது தொழில் திணைக்களம், தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள பிற நிறுவனங்களின் ஊழியர்களுக்கும், வெளி வாசகர்களுக்கும் தொழில்துறை தொடர்பான அனைத்து சட்டங்கள், புத்தகங்கள், வெளியீடுகள் போன்றவற்றை கற்றாராய்வதற்கு வசதிகளை வழங்குகின்றது.

தொழில்திணைக்களத்தின் நூலகத்தில் 200,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள், வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகள் உள்ளன. அதன்படி இந்தத் தொகுப்பை, தொழிற் சட்டங்கள் சார்ந்த கட்டளைச் சட்டங்கள், புத்தகங்கள்,சஞ்சிகைகள், பருவ இதழ்கள், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வெளியீடுகள், ஐக்கிய நாடுகளின் வெளியீடுகள் மற்றும் சிறுவர் தொழிலாளர் முறைபற்றிய வெளியீடுகள் என வகைப்படுத்தலாம்.

1.5.11 நிதிப் பிரிவு

தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காகவும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்காகவும் பௌதீக வளங்கள் மற்றும் நிதி வளங்கள் என்பன இன்றியமையாத காரணிகளாகும். அதன்படி வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி வளத்தினை அரச கொள்கைகளுக்கு அமைவாக வினைத்திறனாகவும் பயன்மிக்கதாகவும் சிக்கனமாகவும் நிர்வகித்தல் நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

திணைக்களத்தின் நிதி நிர்வாகத்தினை வினைத்திறன் மிக்க வகையிலும் வெளிப்படையாகவும் மேற்கொள்வதற்காக நிதிப்பிரிவு பின்வரும் வகையில் செயற்படுகின்றது.

1.5.11.1 திணைக்களத்தின் பெறுகை திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துதல்

1.5.11.2 பெறுகைச் செயன்முறையின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்களையும் சேவைகளையும் உரிய முறையில் பகிர்ந்தளித்தல்

1.5.11.3. பிராந்திய அலுவலகங்களுக்கான சில்லறைத் தொகைகளை வழங்குதல் மற்றும் அந்த அலுவலகங்களின் நிதி மேற்பார்வை

1.5.11.4 மாதாந்த, அரையாண்டு மற்றும் வருடாந்த கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் உரிய தரப்புகளுக்கு குறித்த தினத்தில் சமர்ப்பித்தல்

1.5.11.5 வெளித் தரப்பினரிடமிருந்து கிடைக்கின்ற அனைத்து வரவுகள் மற்றும் செலவுகள் பற்றிய நடவடிக்கைகளை சட்ட விதிகளின் பிரகாரம் நெறிப்படுத்துதல்

1.5.11.6 திணைக்களம் கொண்டுள்ள மூலதன சொத்துக்களை மீளாய்வு செய்தல் மற்றும் கையுதிர்வு நடவடிக்கைகள்

1.5.11.7 திணைக்கள அலுவலர்களுக்கான சம்பளம், கடன் முற்பணம் மற்றும் செலுத்தல்களை மேற்கொள்ளுதல்

1.5.12. திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம் என்பவற்றைத் தயாரித்தல்மற்றும் அதன் கீழ் உள்ள நோக்கங்களுக்கு ஏற்ப திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பிராந்திய அலுவலகங்களையும் வழிநடாத்தும் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்,திணைக்களத்திற்குரிய பிரிவுகளின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நடத்தப்படுகின்ற தொழில் ஆணையாளர்களின் மாதாந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், தொழில் அமைச்சு முன்னேற்ற மீளாய்வுக்காக மாதாந்தம் நடாத்தும் முகாமைத்துவ தொழிற்பாட்டு குழுக் கூட்டத்திற்கு திணைக்களத்தின் முன்னேற்றத்தை தயாரித்தல்,அக்கூட்டத்திற்கான

ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்,தொழில் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களினால் கோரப்படுகின்ற தரவுகளையும் அறிக்கைகளையும் வழங்குதல் என்பன திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் திட்டமிடல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பணியாகும்.

தொழில்திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் முன்னேற்ற மதிப்பாய்வு நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கு இந்தப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. இதன் கீழ்,பிராந்திய அலுவலகங்களின் வருடாந்த முன்னேற்ற மதிப்பாய்வுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன்போது வலயங்களுக்குப் பொறுப்பான பிரதி தொழில் ஆணையாளர்கள் ஊடாக ஒவ்வொரு வலயத்திலும் முன்னேற்ற மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன், பிரிவினால் கண்காணிப்புக்குழுக்கள் ஆற்றுப்படுத்தப்பட்டு ஒவ்வொரு அலுவலகத்தின் முன்னேற்றமும்பரிசோதிக்கப்படுகின்றது.

அதன்படி,தொழில் திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்காக அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்கள் மட்டுமன்றி திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளும் செயல்படும் விதம் மற்றும் வருடாந்த இலக்குகளை நோக்கிப் பயணித்தல் ஆகியவற்றுக்கான மேற்பார்வையும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன்போது,திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற தரவுகளைப் பகுப்பாய்வு செய்து வலய மட்டத்தில் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களை நடாத்தி தொடர்புடைய அலுவலகங்களின் முன்னேற்றத்தை மேற்கொண்டும் மேம்படுத்துவதற்குத் தேவையான விதப்புரைகளை வழங்குதல் இப்பிரிவின் மேற்பார்வை பணியாக நிறைவேற்றப்படுகின்றது.

திணைக்களத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் தேவையான பயிற்சிகளை வழங்குதல், வெளி நிறுவனங்களினால் நடத்தப்படுகின்ற பயிற்சிப் பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆற்றுப்படுத்துதல், பல்கலைக்கழக பட்டங்களுக்கும் பட்டப்பின் படிப்புகளுக்கும் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்குத் தேவையான இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற மனித வள அபிவிருத்திப் பணியாகும்.

அத்துடன், திணைக்களத்தின் அலுவலர்களுக்குத் தேவையான தொழிற்துறை சார்ந்த கட்டளைச் சட்டங்கள், சம்பளச் சபை முடிவுகள் போன்றவற்றை அச்சிட்டு வழங்குதல், தொழில் அலுவலர்களுக்கு கள நடவடிக்கைகளின்போது பயன்படுத்துவதற்குத் தேவையான தொழில் விசாரணை அறிக்கைகள், மாதாந்த நாட் குறிப்புகள் போன்ற பொதுவான மாதிரிப் படிவங்களை அச்சிட்டு வழங்குதல் போன்ற அச்சிடல் நடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.5.13 புள்ளிவிபரப் பிரிவு

இலங்கையில் தொழில் துறையின் திசையைப் பற்றிய புரிதலைப் பெறுதல், கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளல், தற்போதுள்ள தொழில் சட்டங்கள் மற்றும் கட்டளைகளைச் சட்டங்களை திருத்த வேண்டியதன் அவசியத்தை அடையாளம் காணல் மற்றும் தொழில் துறை தொடர்பான எதிர்கால எதிர்வுகூறல்களுக்காக தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்தல் புள்ளிவிபரப் பிரிவின் பணிப்பொறுப்பாகும்.

அதன்படி, இந்தப் பிரிவின் மூலம் தொழிலாளர் புள்ளிவிபர ஆண்டறிக்கை (Labour Statistics Sri Lanka), வேலை நேரம் மற்றும் ஊழியக் கிரயம் பற்றிய ஆய்வு (Survey on Working Hours and Labour Cost), தனியார் துறையின் தொழிலாளர் தேவை பற்றிய கண்ணோட்டம் (Outlook on Labour Needs of Private Sector), தனியார் துறை மற்றும் பகுதியளவான அரச துறை வேலைவாய்ப்பு பற்றிய ஆய்வு (Annual Survey of Private and Semi Government Sector Employment), தொழில் சந்தையின் பிரதான குறிகாட்டிகள் (Key Indicators of Labour Market) போன்ற அறிக்கைகள் ஆண்டுதோறும் அல்லது தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

1.5.14. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

ஏனைய அனைத்து அரச நிறுவனங்கள் போலவே தொழில் திணைக்களமும் அதன் அனைத்து செயற்பாடுகளையும் நிதிப் பிரமாணங்கள், அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளின் பிரகாரம் முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும். அதன் பிரகாரம் மேற்படி நடவடிக்கைகள் வளங்களின் உச்சப் பயன்பாட்டுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் உயர் மட்டத்திலும் இடம்பெறுவதை மேற்பார்வை செய்வதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்தின் நேரடியான கண்காணிப்பின் கீழ் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிதியங்கள்

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியானது இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிர்வகிக்கப்படுகிறது.

இரண்டாம் அத்தியாயம்

முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

2.1 நிறுவனமயமாக்கப்பட்ட தொழில்துறை அமைதியைப் பாதுகாத்தல்

2.1.1 தொழில்தருநர் தொழிலாளர் தரப்புகளுக்கு இடையில் உரையாடலைப் பேணி வருதல்

தனியார் மற்றும் பகுதியளவு அரச துறை நிறுவனங்களின் தொழில்தருநர் மற்றும் தொழிலாளர்களுக்கு மத்தியில் தொழில்துறை அமைதி உறுதிப்படுத்தப்படுகின்ற பணிச்சூழலை உருவாக்குவதற்காக அத்துறையைச் சார்ந்த நிறுவனங்களைச் சேர்ந்த தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரையும் தொழில் சட்டங்கள் தொடர்பில் விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தொழில் சட்டங்கள் தொடர்பில் புரிதல் கிடைக்க வேண்டிய ஏனைய அரச நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

அட்டவணை2.1 – 2023.01.01 இலிருந்து 2023.12.31 வரை நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை / பயனாளர்களின் எண்ணிக்கை
சமூக கலந்துரையாடல் மேம்பாடு	மனித வள அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட சமூக கலந்துரையாடல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்	367	25,975
	மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களினால் நடத்தப்பட்ட சமூக கலந்துரையாடல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்	193	9274
	மாவட்ட ஆலோசனைக் குழு அட்டவணைகள்	79	2245
	வலய சமூக மேடை நிகழ்ச்சிகள்	33	Zoom தொழில்நுட்பத்தின் வாயிலாக
தொழில்துறை பாதுகாப்பு மேம்பாடு	மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்களினால் பிரதேச ரீதியில் நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விரிவுரைகள்	147	4849

தொழில்சார் சுகாதார மேம்பாடு	தொழில்சார் பாதுகாப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட தொழில்தருநர்கள், தொழிலாளர்கள் மற்றும் மருத்துவபீட மாணவர்களுக்கான கல்வி, பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்	429	6078
பெண்கள் மற்றும் இளம் ஆட்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழில் முறையை இல்லாதொழித்தல்	பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான தொழில் சட்டங்கள் தொடர்பில் தனியார் துறையைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்	28	840
	இலங்கையில் இருந்து குழந்தைத் தொழிலாளர் முறையை இல்லாதொழிக்கும் திட்டத்தின் கீழ் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத வலயங்களை நிறுவுவதற்குரியதாக 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்	10	1800
மொத்தம்		**1286**	**51,061** (தோராயமாக)

விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திடங்கள் மூலம் ஏற்பட்ட சாதகமான மாற்றம்

- சமூக உரையாடலை ஊக்குவிப்பதற்காக நிறுவன மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதன் மூலம், 2023 ஆம் ஆண்டில் இரண்டு உற்பத்தி நிறுவனங்களில் ஏற்பட்ட வேலை நிறுத்தப் போராட்டங்களை பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது. இதன் மூலம், உள்நாட்டு பொருளாதாரம் இழக்க நேரிட்டிருந்த சுமார் 1325 மனித நாட்களை உற்பத்தி செயன்முறைக்கு மீண்டும் பங்களிப்பதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க முடிந்தது. அத்துடன், ஆறு நிறுவனங்களில் எழுந்திருந்த அந்நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் சேவை வழங்கலில் கடுமையான பாதகமான விளைவுகளை ஏற்படுத்திய தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கும் இதன் மூலம் முடிந்துள்ளது. இந்த நிறுவனங்களின் தொழில்தருநர் – தொழிலாளர் ஆகிய இரு குழுக்களுக்கிடையேயான உரையாடலை நிலையாக பேணிச் செல்ல சமூக உரையாடல் வட்டங்களும் நிறுவப்பட்டன.

- பணியிடங்களில் ஏற்படும் உயிரிழப்பு விபத்துகளின் எண்ணிக்கை குறைவடைதல். (2022ல் 66 ஆக இருந்த உயிரிழப்பு விபத்துக்கள் 2023ல் 64 ஆக குறைந்துள்ளது.)

புகைப்படம் 2.1 - சமூக உரையாடலை மேம்படுத்துவதற்காக 2023 இல் நடத்தப்பட்டசில நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள்

2.1.2 பரிசோதனைகளை நடத்துதல்

தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான சட்டங்களைதொழில்தருநர்கள் சரியாகப் பின்பற்றுகின்றனரா என்பதை சோதித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தொழில்தருநர் – தொழிலாளர் ஆகிய தரப்பினர்களுக்கு இடையில் சிக்கல்கள் ஏற்படுவதைக் குறைத்து உறவினை மேம்படுத்துவதற்காக 2023.01.01 முதல் 2023.12.31 வரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு அமைகின்றது.

படம் 2.1 - சோதனைகளை நடத்துதல் - 2023.01.01 முதல் 2023.12.31

மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களில் தொழில் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை = 85,365

குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் பெண்களைசேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் நடத்தப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை = 482

மொத்தம் = **91,336**

தொழிலாளர்களின் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை = 3044

தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரம்தொடர்பில் நடத்தப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை = 2445

2.1.3 நியதிச்சட்ட உரிமைகளை மீறுதல் பற்றிய முறைப்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்

நியதிச்சட்ட உரிமை மீறல்கள் மற்றும் தொழில் பிணக்குகள் தொடர்பாக தொழிலாளர்கள் அல்லது தொழிற்சங்கங்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கும், மாவட்ட மற்றும் உப அலுவலகங்களுக்கும் அளித்தமுறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.மேலும், மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டு விசாரணை அல்லது நிறுவன விசாரணை தொடர்பாக திருப்தி அடையாத எவரும் முறையான விசாரணை ஒன்றை செய்துகொள்வதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்திடம் மேற்கொள்ளும் கோரிக்கைகள் தேவைக்கு ஏற்ப மீள் விசாரணை செய்யப்பட்டன.

வரைபடம் 2.1 - 2019 ஆம் ஆண்டு முதல் 2023.12.31 வரை, நியதிச்சட்ட உரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்தல் மற்றும் தீர்க்கப்படுதல்



வரைபடம் 2.2 - 2019 ஆம் ஆண்டு முதல் 2023.12.31 வரை, தொழில் பிணக்குகள்குறித்த முறைப்பாடுகள் கிடைத்தல் மற்றும் தீர்க்கப்படுதல்



2.1.4 வேலை பகிஷ்கரிப்புகளின் போது உரிய தலையீடுகளை மேற்கொள்ளல்

ஓர் கைத்தொழில் பிணக்கு வேலை பகிஷ்கரிப்பு வரை வளர்ச்சியடையக்கூடிய நிலைமைகள் அவதானிக்கப்படுமாயின் திணைக்கள அலுவலர்கள் உடனேயே அந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்வதோடு வேலை பகிஷ்கரிப்பு ஏற்படும் பட்சத்தில் அது தொடர்பில் தேவையான தலையீடுகளை மேற்கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். 2023 ஆம் ஆண்டில் பதிவாகிய வேலை பகிஷ்கரிப்புகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

அட்டவணை 2.2 - வேலைநிறுத்தங்கள் தொடர்பில் பதிவாகிய தரவுகள் - 2023.01.01 முதல் 2023.12.31 வரை			
துறை	பதிவாகிய வேலை பகிஷ்கரிப்புகள்	பங்கேற்ற ஊழியர் எண்ணிக்கை	இழக்கப்பெற்ற மனித நாட்களின் எண்ணிக்கை
பெருந்தோட்ட	04	842	1797
நிர்மாணம்	-	-	-
உற்பத்தி	02	101	4662
சுரங்க அகழ்வு	-	-	-
தங்குமிட மற்றும் உணவு வழங்கல்	-	-	-
பகுதியளவு அரச	-	-	-
ஏனைய சேவைகள்	01	70	70
முழு மொத்தம்	**07**	**1013**	**2329**

2.1.5 கூட்டு ஒப்பந்தங்களுக்கு தொழில்தருநர் - தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரையும் தூண்டுதல்

கூட்டு ஒப்பந்தங்களில் நுழைவதன் மூலம், தொழில் சட்டங்கள் ஊடாக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை விட அதிக சிறப்புரிமைகள் கிடைப்பதோடு தொழில்தருநர்களுக்கு ஊழியர்களிடமிருந்து மிகவும் பயனுள்ள சேவையைப் பெறுவதற்கான நிபந்தனைகளை அடையவும் முடிகின்றது.

சமூக உரையாடல் தொழில்தருநர்களையும் தொழிலாளர்களையும் அத்தகைய கூட்டு ஒப்பந்தங்களில் நுழைய ஊக்குவிக்கிறது. 2023.01.01 முதல் 2023.12.31 வரை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 31 கூட்டு ஒப்பந்தங்கள் உட்பட 2023.12.31ஆம் திகதியில் நடைமுறையில் உள்ள கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 225 ஆகும்.

2.1. 6 நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

பிராந்திய அலுவலகங்கள் அல்லது தலைமை அலுவலகத்தின் தொழில் உறவுகள் பிரிவு மூலம் தீர்க்க முடியாத தொழில் பிணக்குகள் கட்டாய நடுத்தீர்ப்புக்கு அல்லது தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். **2023.01.01** முதல் **2023.12.31** வரையிலான காலப்பகுதியில் நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்குகள் **90** உட்பட 267 பிணக்குகள் தொடர்பில் 2023 இல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 158 பிணக்குகளின் விசாரணை நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு 111 அளிப்புகள் வழங்கப்பட்டுள்ளதோடு **47** அளிப்புகள் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளன. நடுத் தீர்ப்பிலிருந்து வாபஸ் பெறப்பட்டவையின் எண்ணிக்கை 18 ஆகும். அதன்படி, **2023.12.31** இல் **91** பிணக்குகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்றுவந்தன.

2.1.7 தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல்

அனைத்து தொழிற் சங்கங்களும் தொழில் திணைக்களத்தில் தொழிற்சங்கப் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயமாகும். அதன்படி, **2023** ஆம் ஆண்டில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 128 ஆகும். 2023.12.31 இல் தொழிற்பாட்டு நிலையிலுள்ள மொத்த தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 2122 ஆகும். இவ்வருடத்தினுள் 59 தொழிற் சங்கங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

2.2. தொழில் தரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்

தனியார் துறை ஊழியர்களின் ஊதியம் மற்றும் சேவை நிபந்தனைகளை இற்றைப்படுத்துவதும் பாதுகாப்பதும் திணைக்களத்தின் முன்னணிப் பணிப்பொறுப்பாகும். அதன்படி, 2023.01.01ஆம் திகதி முதல் 2023.12.31ஆம் திகதி வரை அவ்விடயத்துறைக்குரியதாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2.2.1 05 நாள் வேலை வாரத்திற்கான அங்கீகாரம் வழங்கப்படுதல்



2.2.2 கூட்டு ஒப்பந்தங்களின் சட்ட ரீதியான செல்லுபடித் தன்மையை பரிசோதித்தல்



2.2.3 சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம், கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழ் சம்பளத்திலிருந்து கழிப்பதற்காக கிடைக்கும் கோரிக்கைகளுக்காக அனுமதி வழங்குதல்



2.2.4 சட்டங்கள் தொடர்பாக மக்களாலும் பல்வேறுபட்ட நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளுக்கு தெளிவுபடுத்தல்களையும் பொருள்கோடல்களையும் வழங்குதல்



2.3 ஊழியர்களின் தொழில்சார் பாதுகாப்புக்காக கண்ணியமான பணிச்சூழலை உறுதிப்படுத்துதல்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பௌதீக ரீதியில் ஏற்படும் உடல் உபாதைகள் மற்றும் விபத்துகளை குறைக்க வேண்டியது திணைக்களத்தின் பொறுப்பாகும். இலங்கையில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பல் ஆகியவை 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கையாளப்படுகின்றன.

பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்வதற்காக திணைக்களம் முக்கியமாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

<table>
<tr><th colspan="2">படம் 2.2 - 2023.01.01 முதல் 2023.12.31 வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்</th></tr>
<tr><td>
</td><td>2023.01.01முதல் 2023.12.31வரை தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் புதிய ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை = 1170</td></tr>
<tr><td>
</td><td>2023.01.01 ஆம் திகதியில்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த கோரிக்கைகளின் நிலுவை = 37
2023 ஆம் ஆண்டில் கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை = 260
2023 ஆம் ஆண்டில் பரிசோதித்து அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்களின் எண்ணிக்கை = 259
2023.12.31ஆம் திகதியில்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தகோரிக்கைகளின் நிலுவை = 38</td></tr>
<tr><td> </td><td>பரிசோதிக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள்
<table>
<tr><td>கைத்தொழிலின் தன்மை</td><td>பரிசோதிக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை</td></tr>
<tr><td>வலு சக்தியைப் பயன்படுத்துகின்றவை</td><td>2859</td></tr>
<tr><td>வலுசக்தியைப் பயன்படுத்தாதவை</td><td>26</td></tr>
<tr><td>கட்டுமானத் தளங்கள்</td><td>20</td></tr>
<tr><td>ஏனையவை</td><td>139</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>3044</td></tr>
</table></td></tr>
</table>

	பதிவாகியுள்ளமரணங்களின் எண்ணிக்கை = 64 பதிவாகியுள்ள மரணம் அல்லாத விபத்துகளின் எண்ணிக்கை = 1479
	அதிகாரம் வாய்ந்த அலுவலர்களால் பரிசோதிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்ட உயர் அபாய இயந்திரங்களின் ஆய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை = 12,212

- **ஊழியர்களின் பாதுகாப்பை மேம்படுத்த முறையான பாதுகாப்புக் குழுக்களை அமைத்தல்**

தொழிற்சாலைகளில் பாதுகாப்பு தொடர்பான சுய கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதும் பாதுகாப்பு கலாசாரத்திற்கு வழிசமைப்பதும் பாதுகாப்பு குழுக்களை அமைப்பதன் முக்கிய நோக்கங்களாகும். அதன்படி, அனைத்து கைத்தொழில் துறைகளையும் உள்ளடக்கி 2023.01.01 முதல் 2023.12.31 வரையிலான காலப்பகுதியில் 435 பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

2.4 தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

சேவை நிலையங்களில் சுகாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக அங்கு சுகாதாரப் பிரச்சினைகள் அல்லது விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பதை விஞ்ஞானரீதியான வழிமுறைகளின் கீழ் கண்டறிதல் மற்றும் அவ் விபத்துகளைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவற்றைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டல் என்பன தொழில் திணைக்களத்தின் பொறுப்புகளாகும். அதன் பிரகாரம் 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதி வரை பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

படம் 2.3 - 2023.01.01 இலிருந்து 2023.12.31 வரை நடாத்தப்பட்ட செயற்பாடுகள்

	சுற்றாடல் அளவீடுகளின் எண்ணிக்கை = 321
	உயிரியல் ரீதியான பரிசோதனைகளின் எண்ணிக்கை = 1722
	தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கணக்காய்வுகளின் எண்ணிக்கை = 402

படம் 2.4 - 2023.01.01 முதல் 2023.12.31வரையிலான காலப்பகுதியில், பல்வேறு நிறுவனங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தலையீடுகள் செய்யப்பட்டு பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	செயற்பாட்டின் நிறைவு
10	10 நிறுவனங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து தேவையான தலையீடுகள் செய்யப்பட்டு அந்த சூழ்நிலைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்மூலம் 3437 ஊழியர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் உறுதி செய்யப்பட்டது.

அத்துடன், கொழும்பு மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்சாலைகள் அமைந்துள்ள 03 கைத்தொழில் பேட்டைகளைத் தெரிவுசெய்து, அந்த கைத்தொழில் பேட்டைகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் ஊழியர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்காக பின்வரும் மூன்று தொழில் பேட்டைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

1. கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் பானலுவ கைத்தொழில் பேட்டை, பாதுக்கை - (22 தொழிற்சாலைகள்)
2. நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கும் ஹோமாகம, கட்டுவான கைத்தொழில் பேட்டை - (63 தொழிற்சாலைகள்)
3. கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் இரத்மலானை கைத்தொழில் பேட்டை - (22 தொழிற்சாலைகள்)

அதன்படி, பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- ✓ தொழிற்சாலைகள் பற்றிய அடிப்படை தகவல்களை சேகரித்தல்
- ✓ வீட்டு முகாமைத்துவத்தை மேம்படுத்த வழிகாட்டுதல்களை உருவாக்கி வழங்குதல்
- ✓ தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கணக்காய்வுகளை நடத்துதல்
- ✓ சுற்றுச்சூழல் அளவீடுகளை மேற்கொள்ளல்
- ✓ பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மேம்படுத்தப்பட வேண்டிய பரிந்துரைகளுடனான அறிக்கைகளை வழங்குதல்
- ✓ தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் சமூக உரையாடல் தொடர்பான 3 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூன்று தொழிற்பேட்டைகளில் நடத்தப்பட்டன.
- ✓ மூன்று தொழிற்பேட்டைகளிலும் 12 பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, சமூக உரையாடல் மற்றும் உற்பத்தித் திறன் குறித்து பயிற்சி அளித்து, அந்த வலயங்களில் பாதுகாப்புக் கலாசாரத்தை உருவாக்க 12 முன்னோடிகளாக நியமித்தல்.

2.5 குழந்தைத் தொழிலாளர் முறையை மறுதலித்தல் மற்றும் தொழில் புரியும் பெண்கள் மற்றும் இளைஞர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்

இலங்கையில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்மற்றும் பெண்களை சேவையில் ஈடுபடுத்தும்போது அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதுல், அந்தச் சட்டங்களை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதன் மூலம் நாட்டிற்கு பெண்களின் உழைப்பின் பயனுள்ள பங்களிப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொழில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

2.5.1 சிறுவர் தொழில் பற்றிய விசாரணைகள்

2023.01.01 இல் நிலுவை = 70 + கிடைத்த முறைப்பாடுகள் = 87 − தீர்க்கப்பட்டவை = 144 = 2023.12.31 இல் நிலுவை = 13

சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பான 12 முறைப்பாடுகளில் 06 முறைப்பாடுகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு. எஞ்சிய 06 முறைப்பாடுகள் தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.5.2 பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துதல் பற்றிய சேவை நிபந்தனைகள் மீறப்படுதல் தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகள் மீதான விசாரணைகள்

2023.01.01 இல் நிலுவை = 11 + கிடைத்த முறைப்பாடுகள் = 07 − தீர்க்கப்பட்டவை = 14 = 2023.12.31 இல் நிலுவை = 04

2.5.3. பெண்களை இரவுநேர சேவையில் ஈடுபடுத்துவதற்காக அனுமதி வழங்கப்படுதல்

→ • அனுமதிகள் 456

2.5.4 இலங்கையில் குழந்தைத் தொழிலாளர் முறையை இல்லாதொழிக்கும் திட்டத்தின் கீழ் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத வலயங்களை நிறுவுவதற்குரியதாக 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

2023 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில் (காலி, கம்பஹா, புத்தளம், மாத்தறை, பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, களுத்துறை மற்றும் திருகோணமலை) குழந்தைத் தொழிலாளிகள் தொடர்பான அபாயகரமான பகுதியைக் கண்டறிந்து அந்த பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் அல்லது சிறுவர் கழகத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு 2023.12.31 ஆம் திகதி அவ் அனைத்து மாவட்டங்களிலும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறும் மற்றும் குழந்தை ஊழியம் பற்றிய ஆபத்தினைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 409 மாணவர்களுக்கு பாடாசலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

புகைப்படம் 2.2 - குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புக் கருத்திட்டம் (நுவரெலியா மாவட்ட நிகழ்ச்சித் திட்டம்) - 2023.09.21

புகைப்படம் 2.3 - குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்புக்கருத்திட்டம் (மொனராகலை மாவட்ட நிகழ்ச்சித் திட்டம்) - 2023.09.20

2.6. தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு

இலங்கையில் தனியார் துறை மற்றும் பகுதியளவு அரச துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான இளைப்பாறல் வாழ்க்கைக் காலத்தை பெற்றுக்கொடுக்கும் அடிப்படை நோக்கத்தை முதலாகக் கொண்டு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்திற்கான நிர்வாகம் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு அதன் நிதி முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இடைக்கிடை திருத்தப்பட்ட இச் சட்டத்தின்கீழ்இன்றளவில் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் பின்வருமாறு அமைகின்றன.

✓	ஊழியர் சேமலாப நிதியத்திற்காக தொழில்தருநர்களைப் பதிவு செய்தல்
✓	ஊழியர் சேமலாப நிதியத்திற்காக அங்கத்தவர்களைப் பதிவுசெய்தல்
✓	பங்களிப்புத் தொகை செலுத்தாத தொழில்தருநர்களிடமிருந்து பங்களிப்புத் தொகைகளை அறவிடுதல்.
✓	அங்கத்தவர்களுக்கு மீழளிப்பு தொகைகளை செலுத்துவதற்கு செலுத்தல் கட்டளைகளை வழங்குதல்.
✓	உறுப்பினரின் ஊழியர் சேமலாப நிதியை பிணையாக வைத்து சம்பந்தப்பட்ட வங்கிகளில் வீடமைப்பு நோக்கங்களுக்காக கடன் பெற்றுக்கொள்ள முன்வைக்கப்படும் கோரிக்கைகளை பரிந்துரை செய்தல்.
✓	பாதுகாப்பு உரிமம் பெற தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களுக்கு அனுமதி அறிக்கைகளை வழங்குதல்.

✓	வீட்டுப் பணி அல்லது மருத்துவ சிகிச்சை பணிகளுக்காக உறுப்பினரின் கணக்கு நிலுவையில் 30% வரை செலுத்துதல்
✓	அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதிக்கான மேற்பார்வை.

2.6.2 ஊழியர் சேமலாப நிதியத்தின் மீளளிப்புகளைச் செலுத்துதல்

2023.01.01 முதல் 2023.12.31 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் மீழளிப்புகளைப் பெற்றுக்கொண்ட மொத்தப் பயனாளர்களின் எண்ணிக்கை 195,537 என்பதோடு அது பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வரைபு 2.3 - 2023 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிவரை அனுப்பப்பட்ட தீர்மானக் கடிதங்களின் எண்ணிக்கை



2.6.3 பங்களிப்புத் தொகை செலுத்தத் தவறுகின்ற தொழில் கொள்வோரிடமிருந்து பணம் அறவிடுவதற்காக அறிவித்தல்களை அனுப்புதல்

பங்களிப்புத் தொகை செலுத்தத் தவறுகின்ற தொழில் கொள்வோரிடமிருந்து அப்பணத்தை அறவிடுவதற்காக திணைக்களத்தினால் முதல் அறிவித்தலும் இறுதி அறிவித்தலும் அனுப்பப்படுவதோடு அவற்றுக்குப் பதிற் செயற்பாடு காட்டப்படாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு அப்பங்களிப்புத் தொகைகளையும் தண்டத் தொகைகளையும் அறவிட்டு கணக்குகளில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வரிப்படம் 2.5 – 2023.01.01 இலிருந்து 2023.12.31 வரை அனுப்பப்பட்ட அறிவித்தல்களின் முன்னேற்றம்

அனுப்பிய முதல் அறிவித்தல்களின் எண்ணிக்கை	முதல் அறிவித்தல்களின் மூலம் அறவிடப்பட்ட தொகை ரூ.	அனுப்பிய இறுதி அறிவித்தல்களின் எண்ணிக்கை	இறுதி அறிவித்தல்களின் மூலம் அறவிடப்பட்ட தொகை ரூ.
14,372	1600 மில்லியன்	9463	415 மில்லியன்

2.6.4 ஊழியர் சேமலாப நிதியத்தை மேம்படுத்துவதற்காகவும் சேவை பேறுநர்களுக்கு சேவை வழங்கலின் வினைத்திறனை மேம்படுத்தவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

- தொழிலாளர்களை ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் பதிவு செய்வதற்காக புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டது. அதன்படி, தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட தொழில் அலுவலகங்களில் இந்த புதிய மென்பொருளை நிறுவும் பணி தொடங்கப்பட்டது. இதன் மூலம் தொழிலாளர்களை ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

- ஊழியர் சேமலாப நிதியத்தில் தொழில்தருநர்களைப் பதிவு செய்தல், தொழிலாளர்களை ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் பதிவு செய்தல், உறுப்பினர்களின் தகவல்களைச் சரிபார்த்தல் (பெயர், உறுப்பினர் இலக்கம் போன்றவை), நன்மைகளுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்தல், நன்மைகளைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பின்னர் விண்ணப்பங்களின் தற்போதைய நிலையைச் சோதித்தல் போன்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகளை மின்னணு சேவைகளாக வழங்க தேவையான மென்பொருள் அமைப்புகளின் மேம்பாட்டு நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் உள்ளன.

• டிஜிட்டல் மாதிரியை அறிமுகப்படுத்தியதன் மூலம், ஊழியர் சேலமாப நிதியின் 30% முன்கூட்டிய நன்மைகளைப் பெறுவதற்கான அடிப்படைத் தகுதியைப்பரிசோதிக்க பயனாளிகளுக்கு வசதி வழங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முறையியல் மூலம் 2023.12.31க்குள் 2076 உறுப்பினர்களின் அடிப்படைத் தகைமைகள் பரிசோதிக்கப்பட்டு, நன்மைகளைப் பெறுவதற்கான அடுத்த கட்டத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர்.

• ஊழியர் சேமலாபநிதி தொடர்பில் அங்கத்தவர்களுக்கு சரியான விழிப்புணர்வு இன்மையினால் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கும் அங்கத்தவர்களுக்கும் தொழில்தருநர்களுக்கும் அறிவூட்டுவதற்கும் இலங்கை மத்திய வங்கியின் ஆதரவுடன் 04 நடமாடும் சேவை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஊழியர் சேமலாபநிதியத்தின் கீழ் ஊழியர்களைப் பதிவு செய்தல், உறுப்பினர் பதிவு செய்த பெயரில் உள்ள பிழைகளை சரி செய்தல், ஊழியர் சேமலாபநிதியத்திலுள்ள உறுப்பினரின் கணக்கு இருப்பை அறிந்து கொள்ளல் போன்ற வசதிகள் இந்த நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்டன.

மொபைல் சேவை திட்டத்தின் தேதி	இடம்	பயனடைந்த பணியாளர்களின் எண்ணிக்கை
2023.05.17 மற்றும் 18	மாத்தளை	1357 க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டன
2023.06.15 மற்றும் 16	யாழ்ப்பாணம்	
2023.10.17 மற்றும் 18	நுவரெலியா	
2023.11.30 மற்றும் 2023.12.01	கொட்டகலை	

புகைப்படம் 2.4 - மாத்தளை நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் - 2023.05.17 மற்றும் 18

புகைப்படம் 2.5 - யாழ்ப்பாணம் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டம் - 2023.06.15 மற்றும் 16

2.7 தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு

ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க பல சட்டங்களை திணைக்களம் அமுல்படுத்துகிறது. அதன்படி, அந்தச் சட்டங்களை மீறும் தொழில்தருநர்கள் மீது தொழில் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுத்து அதன் மூலம் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது.

அதன் பிரகாரம் 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதி வரை தொழில் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3 – 2023.01.01 இலிருந்து 2023.12.31 வரை நீதிமன்ற வழக்குகள் தொடர்பான முன்னேற்றம்

நீதிமன்றம்	2023 ஆண்டுக்கு முன்கொண்டு வரப்பட்ட நிலுவை	2023 ஆம் ஆண்டில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2023.12.31 ஆம் திகதியில் முடிக்கப்பட்ட வழக்குகள்
உயர் நீதிமன்றம்	114	25	0
மேன்முறையீட்டு நீதிமன்றம்	324	112	05
மேல் நீதிமன்றம்	86	57	36
மாவட்ட நீதிமன்றம் மற்றும் வணிக மேல் நீதிமன்றம்	217	10	04

குறிப்பு - சட்ட நடவடிக்கைப் பிரிவு நேரடியாக இடையீடு செய்த வழக்குகளின் விவரங்களை பின்வரும் அட்டவணை வழங்குகிறது.

வரைபடம் 2.4 - 2023.01.01 இலிருந்து 2023.12.31 வரைநீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிககை



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, புதிய சமூக-பொருளாதாரப் போக்குகளுக்கு ஏற்ப தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் சமுதாயங்களுக்கு இடையேயான உறவை மேம்படுத்தும் வகையில் மிகவும் நெகிழ்வான மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட தனி தொழில் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான புதிய வேலைவாய்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் சட்ட வரைவைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. இதன்படி, தொழில் திணைக்களம் இதற்குத் தேவையான ஆதரவினை வழங்குவதோடு 2023 ஆம் ஆண்டின் இறுதியில் தொழில் திணைக்களத்துடன்

சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆகியவை அடங்கிய குழு இந்த சட்ட மூலம் குறித்து கலந்துரையாடி வந்தது.

மேலும், தற்போதைய சமூக-பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்றவாறு சட்டங்களை இற்றைப்படுத்த வேண்டியதன் அடிப்படையில், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான பூர்வாங்க பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

2.8 திணைக்களத்தின் மனித வள முகாமைத்துவம்

திணைக்களத்தின் பணியாளர்களின் தேவைகளைக் கண்டறிதல், தேவைக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்தல், உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள், வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகளை நடத்துதல், செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல், சம்பள ஏற்றங்களை வழங்குதல், இடமாற்றம், உத்தியோகத்தர்களின் ஓய்வு, உத்தியோகத்தர்களின் விடுப்பு மற்றும் ஊழியர்களின் ஒழுக்க நடவடிக்கைகள் ஆகிய பதவியணியின் நாளாந்த நிர்வாகப் பணிகள் 2023 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2.4 –அலுவலர் ஆட்சேர்ப்பு 2023

ஆட்சேர்ப்புப் பரீட்சைகளை நடத்துதல்

பதவி	நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை	பரீட்சையை நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி	பரீட்சை நடத்தப்பட்ட திகைதி	அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி மற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை	
				திகதி	அலுவலர் களின் எண்ணிக் கை
தொழில் திணைக்கத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் தரம் III, உதவி தொழில் ஆணையாளர் (திணைக்களம்)	13	2022 ஜூலை	2023.01.28	2023.11.08	11
தொழில் அலுவலர் - II (மட்டுப்படுத்தப் பட்ட)	60	2022 மார்ச்	2023.04.29	பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை.	

நேர்முகப் பரீட்சைகள் மூலம் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்			
பதவி	**நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை**	**ஆட்சேர்ப்புத்திகதி மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை**	
		திகதி	**ஊழியர்களின் எண்ணிக்கை**
அலுவலக பணியாளர் சேவை (III தரம்)	41	2023.06.07	30
		2023.09.19	08
ஒருங்கிணைந்த சாரதி சேவை (III தரம்)	10	2023.10.23	04
		2023.10.30	01
		2023.12.01	04
		2023.12.12	01

அட்டவணை 2.5 –வினைத்திறன் தடைதாண்டல்பரீட்சைகள் நடத்தப்படுதல்2023			
பதவி	**வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையின் பெயர்**	**பரீட்சைத் திகதி**	**பரீட்சையில் கலந்து கொண்ட அலுவலர்கள்/ஊழியர்களின் எண்ணிக்கை**
உதவி தொழில் ஆணையாளர் (திணைக்களம்)	உதவி தொழில் ஆணையாளர் பதவிக்கான முதலாவதுவினைத்திறன் தடைதாணட்டல் பரீட்சை	2023.11.20 மற்றும் 2023.11.21	03
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான முதல் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான தொடர்புடைய திணைக்களஒழுங்குவிதிகள் மீதான எழுத்துப் பரீட்சை	2023.05.09	01
தொழில் அலுவலர்	தொழில் அலுவலர் பதவிக்கான முதலாவது வினைத்திறன் தடைதாணட்டல் பரீட்சை	2023.06.28	02 (பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை)
தொழில் அலுவலர்	தொழில் அலுவலர் பதவிக்கான இரண்டாவதுவினைத்திறன் தடைதாணட்டல் பரீட்சை	2023.08.29	38 (பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை)
அலுவலக பணியாளர் சேவை -Iதரம்	அலுவலக பணியாளர் சேவையில் மூன்றாவது வினைத்திறன் தடைதாணட்டல் பரீட்சை	2023.08.28	03
அலுவலக பணியாளர் சேவை -II	அலுவலக பணியாளர் சேவையில் இரண்டாவது வினைத்திறன் தடைதாணட்டல் பரீட்சை	2023.08.28	03
லொரி சுத்திகரிப்பாளர் -II	லொரி சுத்திகரிப்பாளர் பதவியின் இரண்டாவது வினைத்திறன் தடைதாணட்டல் பரீட்சை	2023.09.12	01

மேலும், திணைக்களத்தின் முழு ஊழியர்களினதும் பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து உள்ளக பயிற்சித் திட்டங்களை ஒழுங்கு செய்து நடாத்துதல், வெளி நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆற்றுப்படுத்துதல், சேவையின் தேவைக்கு ஏற்ப பல்கலைக்கழக பட்டங்கள் மற்றும் பட்டப்பின் படிப்புகளைப் பயில்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கான இணைப்பாக்க நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூ.6,000,000.00 ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றிருந்தது. இதில் 2023.12.31 ஆம் திகதியில் செலவு ரூ.4,062,418.00 என்பதோடு ஒதுக்கீட்டின் சதவீதமாக செலவு 68% ஆகும்.

இது தொடர்பான விவரமான தகவல் 06 அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.9 தொழில் திணைக்களத்தின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி

நாடளாவிய ரீதியில் பரந்து வாழும் சேவை பெறுநர்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, திணைக்களமானது தொழில் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திலும், நாடளாவிய ரீதியில் உள்ள பிராந்திய தொழில் அலுவலகங்களிலும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணியை மேற்கொண்டது.

இதன்படி, பிராந்திய அலுவலகங்களின் தேவைக்கேற்ப சிறு திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மெஹேவர பியேசா கட்டிடத்தின் மாடிகளிலும், தொழிலாளர் செயலக கட்டிடத்தின் மாடிகளிலும் உள்ளகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன..

அட்டவணை 2.6 – உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி 2023	
கருத்திட்டம்	**2023.12.31 ஆம் திகதியில்பௌதீக முன்னேற்றம்**
மெஹெவர பியச கட்டிடத்தின் 8, 9, 10, 11, 12, 13 மற்றும் 14 ஆம்தளங்களின் உள் கட்டமைப்புகளைத் தயாரித்தல்	100%
தொழில் செயலகத்தின் 3வது, 4வது, 5வது மற்றும் 6வது தளங்களின் உள் கட்டமைப்புகளைத் தயாரித்தல்	பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.10 தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள்

2.10.1 வெளியீட்டு நடவடிக்கைகள்

தொழில் துறை பற்றியமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக பின்வரும் வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

- **“கத்திகாவ“சஞ்சிகை**



நிறுவன மட்டத்தில் தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான அறிவை வழங்குவதன் மூலம் பிணக்குகளைக் குறைப்பதற்கு பங்களிப்பது கத்திகாவ சஞ்சிகையை வெளியிட்டதன் நோக்கமாகும்.அதன்படி, கத்திகாவ சஞ்சிகையின் 22 வது தொகுதி 2023 ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது.

- **தொழில்துறை பாதுகாப்பு பற்றிய கையேடுகள்**

அபாயகரமான நிலைமைகளைக் கொண்ட 07 கைத்தொழில் துறைகளை அடையாளம் கண்டு 2022 இல் அந்தத் துறைசார் நிபுணர்களின் வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளப்பட்ட

ஆராய்ச்சியின் முடிவுகளின் அடிப்படையில் அந்தந்த தொழில்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் பொருட்டு தயாரிக்கப்பட்ட **05** கையேடுகளை அச்சிடும் பணிகள் **2023** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

- **தொழில்துறை பாதுகாப்பு குறித்து பொதுமக்களையும் தொழில்தருநர் - தொழிலாளர்களையும் விழிப்புணர்வு செய்வதற்காக பிரச்சாரப்பலகைகளைப் பொருத்துதல்**

கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்த ஒதுக்கீட்டின்படி மேற்படி கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி ஹோமாகம கைத்தொழில் பேட்டை, பானலுவ கைத்தொழில் பேட்டைமற்றும் இரத்மலானை கைத்தொழில் பேட்டைஆகிய இடங்களில் **3** விளம்பரப் பலகைகள் தயாரிக்கப்பட்டு நிறுவப்பட்டன.

இந்த விளம்பரப் பலகைகளை நிறுவுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் பின்வருமாறு.

1. தொழிற்சாலைகளைப் பதிவு செய்தல், நீராவி கொதிகலன்களைப் பதிவு செய்தல் மற்றும் தொழிற்சாலை கட்டிட வரைபடங்களுக்கான அனுமதி ஆகியவற்றை மேம்படுத்துதல்.

2. தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்வாய்ப்படுதல் சம்பவங்கள் பற்றிய அறிக்கையிடலை மேம்படுத்துதல்.

3. பணியிடங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்து பொதுமக்கள் மற்றும் தொழில்தருநர்கள், தொழிலாளர்களை விழிப்பூட்டல்.

4. தொழில்சார் விபத்துக்கள் மற்றும் தொழில் சார்ந்த நோய்களைக் குறைத்தல்.

5. பணியிடத்தில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்வதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.



- **வேலை செய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில்கிரயம் பற்றியமீளாய்வு**

இந்த மீளாய்வின் மூலம் நாட்டின் அபிவிருத்தி உத்திகளைத் தயாரிப்பதற்குத் தேவையான ஊழியக்கிரயம்,வேலை செய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் சராசரி ஈட்டல் பற்றிய தரவுகள் பெறப்படுகின்றன. அதன்மூலம் அரச மற்றும் தனியார் துறையின் திட்டமிடல் பணிகள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் தொழில்தருநர்-தொழிலாளர் ஆகிய இருதரப்பினரின் முன்னேற்றத்திற்காக தயாரிக்கப்படும் எதிர்கால திட்டங்களுக்கும் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றன. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வேலை செய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் ஊழியக் கிரயம் குறித்த மீளாய்வின் அறிக்கைகளைத் தயாரிக்கும் பணி இறுதி கட்டத்தில் இருந்தது.

- **தொழில் புள்ளிவிபர வருடாந்த அறிக்கை 2022**

தொழில் துறைக்கான கொள்கைத் திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்துவதற்குத் தேவையான தரவுகளை வெளியிடுவதற்கும், தரவுப் பயனர்களுக்குத் தேவையான தரவுகளை வழங்குவதற்கும் இந்த அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. அதன்படி, 2022ம் ஆண்டுக்கான அறிக்கை தயாரிக்கும் பணி இறுதிக்கட்டத்தில் இருந்தது.

2.10.2 திணைக்களத்தின் உத்தியோகபூர்வ சமூக ஊடக நடவடிக்கைகள்

திணைக்களத்தினால் உத்தியோகபூர்வ யூடியுப் அலைவரிசையொன்றும், முகப்புத்தக பக்கம் ஒன்றும் ட்விட்டர் கணக்கொன்றும் பேணப்பட்டு வருவதுடன் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

YouTube Channel	Subscribers: 1325
Facebook Page	Followers: 1229
Twitter	Followers: 94

2.10.3 திணைக்களத்தின் இணையத்தளம்

சேவை பெறுநர்களுக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்கள், மாதிரிப் படிவங்கள், ஆலோசனைகள் மற்றும் தொழில் சட்டங்கள் மற்றும் தொழில் கொள்வோரால் பின்பற்றப்பட வேண்டிய சம்பள சபைத் தீர்மானங்கள் போன்ற அவசியமான ஆவணங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளக்கூடிய வகையில் அவை www.labourdept.gov.lk எனும்

திணைக்களத்தின் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு அவற்றை நிதமும் இற்றைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. திணைக்களத்திற்கான புதிய உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்றைத் தயாரிக்கும் பணி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதுடன், திணைக்களத்தின் சேவைகளை மேலும் விரிவான முறையில் இணையவழி முறைகள் மூலம் வழங்குவதற்கான வசதிகள் புதிய இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.10.4 தொழில் திணைக்களத்தின் நூலகம்

தொழில் துறை தொடர்பான சட்டங்கள்,புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பில்இலங்கையில் காணப்படுகின்றபிரதான நூலகத்தைதொழில் திணைக்களம் பேணிவருகிறது. இது தொழில் திணைக்களம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள பிற நிறுவன பணியாளர்கள் மற்றும் வெளி வாசகர்களுக்கு தொழில் சட்டத் துறைக்குரிய அனைத்து சட்டங்கள், புத்தகங்கள், வெளியீடுகள் போன்றவற்றைக் கற்றாராய்வதற்கு வசதிகளை வழங்குகிறது.

நூலகத்தின் வசதிகளை மேலும் மேம்படுத்தும் பணிகள் **2023** ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டதுடன் அதன்படி, தேசிய நூலக மற்றும் ஆவணவாக்க சேவைகள் சபையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், நூலகத் தகவல் முகாமைத்துவ முறைமையை (கோஹா மென்பொருள்) நிறுவுவதற்குத் தேவையான அடிப்படைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2.10.5 பிரதான கொண்டாட்ட தின நிகழ்வுகளை நடத்துதல்

- **தொழில் திணைக்களம்** 100 **ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதை முன்னிட்டு நடத்தப்பட்ட கொண்டாட்ட நிகழ்ச்சி**

தொழில் திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விசேட நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் அட்டையை வெளியிடும் நடவடிக்கைகள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணாயக்கார அவர்களின் தலைமையில் **2023.12.21** ஆம் திகதி அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

- **சர்வதேச மகளிர் தின விழா நிகழ்ச்சி** 2023

"அவளே தேசத்தின் பெருமை" எனும் தொனிப்பொருளைக் கொண்ட **2023.03.08** ஆம் திகதி கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தினத்திற்கு ஒருங்கமைவாக தொழில் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின கொண்டாட்ட நிகழ்ச்சி **2023.03.16** ஆம் திகதி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணாயக்கார அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பணிபுரியும் பெண்களின் அழகியல் திறன்களைப் பாராட்டி, பெண்களுக்கு ஏற்புடைய சட்டங்கள் உள்ளடங்கியதாக, "அவளது உழைப்பால் வளரும் உலகம்" என்ற தொனிப்பொருளில் "வெடலிய சித்தம் (பணிப் பெண் ஓவியம்) " என்ற பெயரில் நடைபெற்ற சுவரொட்டி வடிவமைப்பு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பணிபுரியும் பெண்களின் சேவைப் பாதுகாப்பு தொடர்பான தொழில் சட்டங்கள் குறித்த எளிய மொழி வழிகாட்டியாகத் தயாரிக்கப்பட்ட "பணிப் பெண்ணைப் பாதுகாக்கும் தொழில் சட்டம்" எனும்கையேட்டை அதிகாரப்பூர்வமாக தொழில் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுவது இன்றைய தினம் மேற்கொள்ளப்பட்டது.

- **குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச தினம்** - 2023

2025 ஆம் ஆண்டளவில் இலங்கையில் இருந்து குழந்தைத் தொழிலாளர்களை இல்லாதொழிக்கும் திட்டத்தின் கீழ், ஜூன் **12** ஆம் திகதி கொண்டாடப்படும் "குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச தினத்திற்கு" ஒருங்கமைவாக, தொழில் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணாயக்கார அவர்களின் தலைமையில் **2023.06.15** ஆம் திகதி, காலி நெலுவ மண்டலபுர கனிஷ்ட வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது. குழந்தைத் தொழிலாளர்கள் உருவாவதற்கான ஆபத்தினைக் கொண்ட பொருளாதாரச் சிக்கல்களை

எதிர்நோக்கியுள்ள **6** குடும்பங்களுக்கு, ”மலிபன் நிதஹஸே ரன் தருவோநிதியம்” மூலம் அந்த குடும்பங்களுக்கு சுயதொழிலில் ஈடுபடத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

2.11 திணைக்களத்தின் பணிகளை மேற்பார்வையின் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடாத்துதல்

திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திலுள்ள இலக்குகளை அடைவதற்காக திணைக்களத்தின் அனைத்து பிரிவுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் பணியாற்றும் விதம் மற்றும் முன்னேற்றம் ஆராயப்பட்டது. அதன்படி, ஒவ்வொரு மாதமும் தொழில் ஆணையாளர்களின் மாதாந்தக் கூட்டம் நடத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவின் முன்னேற்றம் மற்றும் பிரிவுகளின் பணிகளை மேற்கொள்வதில் எழும் பிரச்சினைகள் குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

2023 ஆம் ஆண்டில், திணைக்களத்தின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன. அதன் கீழ் வடிவமைப்பு ஆராய்ச்சி பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு 2023 ஆம் ஆண்டில் 29 மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் செயற்பாடுகளை ஆய்வு செய்து மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கியது.

2023 ஆம் ஆண்டின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகள் தொடர்பான முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்காக, மாவட்ட துணை தொழிலாளர் ஆணையர்கள், தங்கள் பிராந்தியங்களுக்கு உட்பட்ட மாவட்ட மற்றும் துணைத் தொழிலாளர் அலுவலகங்களில் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களை நடத்தினர்.

2.12 கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டம்

கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயல்படுத்த 2023 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு 12,083,345.00 ரூபாநிதி ஒதுக்கப்பட்டதோடு பின்வரும் வகையில் நிகழ்ச்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அட்டவணை 2.7 – 2023 இல் செம்மையான வேலை நிகழ்ச்சி இன் கீழ் உள்ள கருத்திட்டங்களின் முன்னேற்றம்			
கருத்திட்டத்தை மேற்கொண்ட பிரிவு	2023 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு (ரூ.)	2023.12.31 ஆம் திகதியில் செலவினம் (ரூ,)	ஒதுக்கீடுகளின் சதவீதமாக செலவினம்
மனித வள அபிவிருத்திப் பிரிவு	5,809,500.00	3,420,274.25	**59%**
பெண்கள்மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு	3,723,845.00	2,994,967.42	**80.4%**
கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு	1,930,000.00	1,708,000.00	**88.5%**
திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு	620,000.00	620,000.00	**100%**
மொத்தம்	**12,083,345.00**	**8,743,241.67**	**72.4%**

2.13 நிதி முகாமைத்துவம்

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி வளத்தை அரச கொள்கைகளுக்கு அமைவாக வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுள்ள வகையிலும் உரிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் பிரகாரம் 2023.12.31 ஆம் திகதியாகும் போது ஒதுக்கப்பட்ட மீண்டெழும் செலவுகளுக்கான ஏற்பாடுகளில் 95% வீதமும் மூலதன செலவுகளுக்கான நிதி ஏற்பாடுகளில் 08% வீதமும் இதற்காக பயன்படுத்தி நிதி முகாமைத்துவ இலக்குகள் அடையப்பட்டுள்ளன.

அட்டவணை 2.8 – 2023 இன் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்			
		2023.12.31 ஆம் திகதியில்	ஒதுக்கீடுகளின் சதவீதமாக உண்மையான செலவினம்
மீண்டெழும் செலவினம்	ஒதுக்கீடு(ரூ)	2,674,800,000.00	95%
	செலவினம் (ரூ)	2,535,807,744.00	
மூலதன செலவினம	ஒதுக்கீடு(ரூ)	1,514,200,000.00	08%
	செலவினம் (ரூ)	123,744,798.00	

2.14 தொழில் திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான பிரதான எதிர்காலத் திட்டங்கள்

- முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக மிகவும் சாதகமான சூழலை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க, பல தசாப்தங்கள் பழமையானதும் சிக்கலானதுமான தொழில் சட்டங்களுக்குப் பதிலாக எளிமையானதும் தொழில்தருநர் – தொழிலாளர் உறவினை மேம்படுத்துவதற்கு பங்களிக்கின்றதுமான புதிய தொழில் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தொழில் திணைக்களம் 2023 இல் அடிப்படைப் பணிகளை மேற்கொண்டதுடன் அதன் அடுத்தகட்ட பணிகளை மேற்கொள்ளல்.

- 2025 ஆம் ஆண்டுக்குள் இலங்கையின் அனைத்து மாவட்டங்களும்“குழந்தை தொழிலாளர் இல்லாத வலயங்களாக“உறுதிப்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் உள்ள சுதந்திர வர்த்தக வலயங்கள்,கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் உள்ள கைத்தொழில் பேட்டைகள்,பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் உள்ள தோட்டங்கள் போன்ற முறையான துறைகளை குழந்தைத் தொழிலாளர் இல்லாத வலயங்களாக மாற்றுவதற்கான உறுதிமொழியைப் பெறுவதற்கான ஒரு முறையியலை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மீன்பிடித் துறையைச் சார்ந்ததாக, குறிப்பாக குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் நோக்கில், அத்துறை சார்ந்ததாக விசேட சோதனைகள் மற்றும் முற்றுகைத்தொடர் ஒன்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- மாவட்ட மட்டத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டு புதிய மென்பொருள் முறைமையொன்றைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களிலும் புதிய மென்பொருள் முறைமையை நிறுவுவதற்கும், உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளித்த பின், புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்யும் பணியை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய மென்பொருள் முறையைப் பயன்படுத்துவதன் மூலம், பணியமர்த்தப்படும் சந்தர்ப்பத்திலேயே உரிய மாவட்டத்திலோ அல்லது உப தொழில் அலுவலகத்திலோ விரல் அடையாளத்தை வழங்கி, ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்வதற்கான வாய்ப்பு ஊழியருக்கு அளிக்கப்படும். எனவே, மென்பொருள் முறைமையில் ஊழியர் பற்றிய சரியான தரவுகளை ஆரம்பத்திலேயே உள்ளிடுவதன் மூலம், ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகள் வழங்கப்படும்போது ஏற்படும் சிக்கல்களைக் குறைத்து, சேவைபெறுநர்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது.

- ❖ கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் சார்ந்ததாக இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் நோய்களைக் குறைப்பதன் நோக்கத்துடன், மேற்படி மூன்று மாவட்டங்களிலும் அமைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் தொடர்பான பூர்வாங்க கணக்கெடுப்பினை மேற்கொண்டு அந்தத் தொழில்களின் பணிச்சூழல் நிலைமைகள் பற்றிய அளவீடுகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அந்தத் தொழில்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டுக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் தொடர்சியான பின்தொடரல்களை மேற்கொள்ளல்.

- ❖ திணைக்களத்தின் இணையதளம் மூலம் இணையவழி சேவைகளை வழங்குவதை விரைவுபடுத்துதல்.

- ❖ உள்நாட்டு பல்கலைக்கழகங்களின் ஆதரவுடன் தொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட பொருத்தமான ஆராய்ச்சி தலைப்புகளின் கீழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளைமேற்கொள்ளல்.

எச்.கே.கே.ஏ.ஜயசுந்தர
தொழில் ஆணையாளர் நாயகம்

மூன்றாம் அத்தியாயம்

2023 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

3.1 அத்தியாயம் 2023ம் டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான முழு நிதிசெயல் திறன் அறிக்கை

					ஏசீஏ- எப்
	2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று				
				(ரூபா)	
திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023		**குறிப்பு**	**உண்மை நிலை 2023**	**உண்மை நிலை 2022**	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	**1**	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	**2**	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	**3**	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	**4**	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,405,846,000	1,431,000,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		3,876,444,205	2,635,879,570	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		122,739,450	102,023,080	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**5,405,029,654**	4,168,902,650	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**5,405,029,654**	4,168,902,650	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		**83,240,565**	62,802,436	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**5,321,789,089**	4,106,100,214	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
1,739,000,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	**5**	1,708,472,497	1,639,335,410	
917,100,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	**6**	813,472,042	642,584,824	ஏசீஏ-2(ii)
18,700,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	**7**	13,863,206	15,943,222	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	**9**	-	207,484	
2,674,800,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**2,535,807,745**	2,298,070,940	
	மூலதனம் செலவினம்				
1,049,200,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	**10**	86,065,584	52,592,170	
454,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	**11**	33,270,520	222,306,486	
-	மூலதன மாற்றல்கள்	**12**	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	**13**	-	-	
6,000,000	திறன் விருத்தி	**14**	4,062,418	5,311,943	
5,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	**15**	346,275	-	
1,514,200,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**123,744,798**	280,210,599	
	வைப்புக் கொடுப்பனவுகள்		**3,681,525,657**	2,578,419,939	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		**139,905,842**	97,932,971	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**3,821,431,499**	2,676,352,910	
				-	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		6,480,984,041	5,254,634,449	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(1,159,194,953)	(1,148,534,235)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(1,159,194,953)	(1,148,534,235)	ஏசீஏ-7
-	**டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி**		(1,159,194,953)	(1,148,534,235)	ஏசீஏ-3

3.2 நிதிநிலை அறிக்கை

			ஏசீஏ -பீ
2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று			
		உண்மை நிலை	
	குறிப்பு	**2023**	**2022**
		ரூபா	**ரூபா**
<u>நிதி சொத்துக்கள் அற்றது</u>			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	17,824,004,744	17,712,212,860
<u>நிதி சொத்துக்கள்</u>			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	274,107,020	256,543,819
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**18,098,111,763**	**17,968,756,679**
<u>தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு</u>			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(688,549,513)	(511,194,166)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		17,824,004,744	17,712,212,860
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	962,656,533	767,737,985
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**18,786,661,277**	**18,479,950,845**

2023 டிசம்பர் 31ல் உள்ளவாறான

நிதி நிலைமைக் கூற்று

பக்க இலக்கம் 11 முதல் 46 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம்47 முதல்59 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும்.அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் அவை சரியானது என்பதையும் சான்றுப்படுத்துகிறேன்.

அறிக்கையிடப்படும் நிறுவனத்திற்கு நிதிக்கட்டுப்பாட்டிற்கென பயனுறுதிமிக்கதொரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை காணப்படுகிறது என்பதையும், அவ்வாறான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைக் கண்காணிப்பதற்கென காலத்திற்குக் காலம் மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும், அம்முறைமையைப் பயனுறுதி வாய்ந்ததாக ஆக்குவதற்குத் தேவையான சீரமைப்புகள் உரியவாறு மேற்கொள்ளப்பட்டன என்பதையும் நாம் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான கணக்காளர்
பெயர் : R P A Wimalaweera	பெயர் : H.K.K.A. Jayasundara	பெயர் :
பதவி : Secretary, Ministry of Labour and Foreign Employment, 7th Floor, "Mehewara Piyesa" Narahenpita, Colombo 05.	பதவி : Commissioner General of Labour (Acting), Department of Labour, Colombo 05	திகதி : 2024.02. 27
திகதி : 2024.02. 28	திகதி : 2024.02. 27	

S. Parameswaran
Chief Accountant
Department of Labour
Colombo 05

4

3.3 காசுப்பாய்ச்சல் அறிக்கை

ஏசீஏ- சீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2023 ரூபா	2022 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	1,153,377,936	1,181,152,646
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,405,846,000	1,431,000,000
முற்பணங்களை அறவிடல்	132,455,074	109,231,636
வைப்புக்களின் பெறுகை	3,876,444,205	2,635,879,570
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**6,568,123,215**	**5,357,263,852**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	2,509,086,774	2,277,464,979
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	13,863,206	15,943,222
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	29,565,347	114,003,608
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	83,240,565	62,802,436
முற்பணக் கொடுப்பனவு	139,559,050	98,040,971
வைப்புக் கொடுப்பனவு	3,681,525,657	2,578,419,939
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**6,456,840,600**	**5,146,675,155**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**111,282,615**	**210,588,697**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	111,282,615	210,588,697
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**111,282,615**	**210,588,697**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(111,282,615)**	**(210,588,697)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிநிலை அறிக்கை களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை	
1)	**அறிக்கையிடல் காலப்பகுதி**
	இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.
2)	**அளவீட்டுக்கான அடிப்படை**
	நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
	நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.
3)	**வருமானத்தை அடையாளங்காணுதல்**
	நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.
4)	**சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**
	சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.
	கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.
5)	**சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**
	இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.
6)	**காசு மற்றும் காசுக்கு சமமானவை**
	காசு மற்றும் காசுக்கு சமமானவை 2023 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.
*	ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் “அறிக்கையிடலின் அடிப்படை” என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.
*	அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே ”அறிக்கையிடலின் அடிப்படை” இன் கீழ் ்வெளிப்படுத் தப்படவேண்டும்.

3.5 வருவாய் வசூல் செய்யும் செயற்றிறன்

வருமான குறியீடு	வருவாய் குறியீட்டின் விபரம்	வருவாய் மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை(ரு)	இறுதி வருவாய் மதிப்பீடு %
பொருந்தாது					

3.6 ஒதுக்கப்பட்டஒதுக்கீட்டின் பயன்பாட்டுசெயற்றிறன்

ஒதுக்கீட்டின் வகை	ஒதுக்கப்பட்டஒதுக்கீடு		உண்மையானசெலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுமுடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் தொகை%
	ஆரம்பஒதுக்கீடு	இறுதிஒதுக்கீடு		
மீண்டுவரும்	2,679,000,000.00	2,674,800,000.00	2,535,807,745.00	95%
மூலதனம்	1,510,000,000.00	1,514,200,000.00	123,744,798.00	8%

3.7 நி.பி 208 விதிமுறைகள், பிறஅமைச்சுகள் /திணைக்களங்களின் பிரதிநிதிகளால்

தொடர். இல.	அமைச்சு / திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டுக்கான நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டில் முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீடு
			ஆரம்பம்	இறுதி		
01.	ஓய்வூதியத் திணைக்களம்	ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை சாட்டிக்கொள்ளல்.	4,495,252.01	4,495,252.01	4,495,252.01	100%
02.	அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சு	இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின்ஐ ஆம் வகுப்பின் தரம் ஐஐஐ இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய உத்தியோகத்தரின் ஆரம்ப பயிற்சி காலத்தில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துதல்	21,505.00	21,505.00	21,505.00	100%
03.	அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சு	பட்டதாரி பயிற்சி உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.	8,265.00	8,265.00	8,265.00	100%
04.	தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு	அமைச்சின்நீர் மற்றும் மின்சாரத்திற்கான செலவுகள்	5,717,658.25	5,717,658.25	5,717,658.25	100%
05.	தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு	அமைச்சின் வாடகைக்கான செலவு	1,413,370.00	1,413,370.00	1,413,370.00	100%
06.	தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு	மெஹெவர பியெச வசதிகளுக்கான முகாமைத்துவ கட்டணம்	3,745,286.15	3,745,286.15	3,745,286.15	100%
07.	தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு	கண்ணியமான பணி திட்டத்திற்கான செலவு.	12,088,015.00	12,088,015.00	8,743,241.67	72%
08.	தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு (வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு)	அமைச்சின்நீர் மற்றும் மின்சாரத்திற்கான செலவு	1,551,362.12	1,551,362.12	1,551,362.12	100%
09.	தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு (வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு)	மெஹெவர பியெச வசதிகளுக்கான முகாமைத்துவ கட்டணம்	576,847.05	576,847.05	576,847.05	100%
10.	பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம்	பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கான கொடுப்பனவு செலுத்தப்படுதல்	4,588,500.00	4,588,500.00	3,292,560.00	72%

3.8 நிதிஅல்லாதசொத்துகள் அறிக்கைசெய்யும் செயற்றிறன்

சொத்துகுறியீடு	குறியீடுவிபரம்	31.12.2022 திகதியிட்டபொருட்கள் கணக்கெடுப்புஅறிக்கையின்படி இருப்பு	31.12.2022 நிதிஅறிக்கையின் படி இருப்பு	எதிர்காலத்தில் கணக்கிடப்படவேண்டியது	முன்னேற்றத்தை% எனகுறித்தல்
9151	கட்டிடகட்டமைப்புகள்	2,270,144,732.56	2,270,144,732.56		100%
9152	இயந்திரங்கள்	763,473,929.17	763,473,929.17		100%
9153	காணிகள்	2,262,720,000.00	2,262,720,000.00		100%
9154	புலனாகதசொத்துகளை	48,320,283.80	48,320,283.80		100%
9155	உயிரியல் பண்புகள்				
9160	செய்துகொண்டுக்கும் வேலை	12,479,345,798.25	12,479,345,798.25		100%
9180	குத்தகைக்குவிடப்பட்டசொத்துக்கள்	-	-		

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

LSW/B/DOL/SR/01/2023 2024 ஜூலை தேதி

கணக்கீட்டு அலுவலர்
தொழில் திணைக்களம்

தலைப்பு – 221, தொழில் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சுருக்க அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு – 221, தொழில் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களும் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் கொண்டமைந்த 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தொழில் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான தொழில் திணைக்களத்தின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழி செய்யப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு அலுவலரினதும் கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு அதன் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு அலுவலர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த முறைமையின் செயற்திறன் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து, அதற்கமைய முறைமையினை பயனுள்ளதாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக உள்ள போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளதென்பதற்கான உறுதிப்படுத்தலல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக் கூடியதாக இருப்பதுடன் அதன் அளவுசார்தன்மையானது, இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியிருக்கும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்தினை இனங்காண்பதற்காகவும் மதிப்பிடுவதற்காகவும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படாதபோதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மதிப்பாய்வு செய்யப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியிருப்பதும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுககளின் ஒட்டுமொத்த சமர்ப்பணமும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கட்டுநிதி இணக்கக் கூற்றின் நிலுவை

கட்டுநிதி இணக்கக் கூற்றில் ஏனைய தலைப்புக்களால் முற்பண 'பி' கணக்கில் செய்யப்பட்ட வரவு நிலுவைத் தொகைக்கும் திறைசேரியின் கூற்றுக்களின்படி வரவுகளுக்கும் இடையே ரூ.193,403 வித்தியாசம் காணப்பட்டது.

1.6.2 நிதி அல்லாத சொத்துக்கள்

ஊழியர் சேமலாப நிதிப் பிரிவின் தகவல் முறைமையை வலுவூட்டும் கருத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 22,462,587 பெறுமதியான சொத்துக்கள் 2023 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் சொத்துக் கொள்வனவுகளாகப் பதிவாகியிருந்ததோடு 2023 ஆம் ஆண்டின் ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதிக் கூற்றுக்களிலும் சொத்துக்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

1.6.3 ஆவணங்கள் மற்றும் புத்தகங்களைப் பராமரித்திருக்காமை

சேதங்கள் தொடர்பான ஆவணத்தை திணைக்களம் பராமரித்திருந்தாலும், அந்த ஆவணம் மாவட்ட மற்றும் பிராந்திய அலுவலகங்களின் தகவல்களுடன் இற்றைப்படுத்திய நிலையில் பேணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

2. நிதிசார் மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 2 செலவினத் தலைப்புகளுக்குரியதாக வழங்கப்பட்டிருந்த ரூ.126,000,000 ஒதுக்கீட்டில் எந்தச் செலவும் செய்யப்படாததால் 100 சதவீத ஒதுக்கீடு சேமிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியாகும்போது, 14 செலவினத் தலைப்புகளுக்குரியதாக வழங்கப்பட்டிருந்த 1,381,150,000 ரூபா ஒதுக்கீட்டில் 102,105,930 ரூபா மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த மிகுதியானது நூற்றுக்கு 48 முதல் நூற்றுக்கு 97 வரை இருந்தது.

2.2 அரச அலுவலர்களுக்கான முற்பண பி கணக்குகளின் இணக்கக்கூற்று

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில், சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்ட அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடனின் மீதி ரூ.2,202,325 ஆக இருந்ததோடு இதில் ரூ.129,316 மீதி 20 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளவையாகும்.

(ஆ) சேவை இடைநிறுத்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகள் ரூ.957,800 ஆகும் என்பதோடு, இதில் ரூ.61,050 மீதிகள் 1-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவையென்பதுடன் ரூ.138,040 மீதிகள் 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவையாக காணப்பட்டது.

(இ) 12 ஓய்வுபெற்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதிகள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளவையாகும்.

(ஈ) இறந்த 6 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூ.513,432 ஆகும் என்பதோடு இதில் ரூ.379,472 ஆனது 1-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதும் ரூ.133,960 ஆனது 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதுமாக காணப்பட்டது.

2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை

	சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு -------------------------	இணங்காமை --------------------
(அ)	தொழில் ஆணையாளர் நாயகத்தின் 2013 ஆகஸ்ட் 16 ஆம் திகதி பா10/ கணக்காய்வு சுற்றறிக்கை	திணைக்களத்தில் சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான ஆவணம் இருந்தபோதிலும், அந்த ஆவணம் இற்றைபடுத்தப்பட்ட நிலையில் இருப்பதாக அவதானிக்கப்படவில்லை. தொழில் ஆணையாளர் நாயகத்தின் மேற்படி சுற்றறிக்கையின்படி, அனைத்து மாவட்ட மற்றும் பிராந்திய அலுவலகங்களும் சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான தகவல்களை வழங்க வேண்டும் அல்லது அவ்வாறில்லாத பட்சத்தில் வெற்று அறிக்கையை வழங்க வேண்டும் என்றபோதிலும் அது செய்யப்படவில்லை.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவையின் குறியீடு நி.ஒ.140 (3)	2023 ஆம் ஆண்டில், திணைக்களத்தின் சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான ஆரம்ப அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.
(இ)	நி.ஒ.755 (1)	இடமாற்றம் போன்ற சந்தர்ப்பங்களில் பொருட்களைக் கையளித்தல் மற்றும் பொறுப்பேற்றல் முறையாக செய்யப்பட வேண்டும் என்றபோதிலும் தொழில் திணைக்களம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிப் பிரிவின் இரண்டு களஞ்சியங்கள் 2022 ஜனவரி முதல் இணைக்கப்பட்டபோது, தொழில் திணைக்களத்தின் களஞ்சியம் தொடர்பான இருப்புக் கணக்கெடுப்பு செய்யப்பட்டு, களஞ்சியத்திற்குப் பொறுப்பான அலுவலரிடம் முறையாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	நி.ஒ.770 (4)	அரச நிறுவனங்களில் உள்ள பழுதடைந்த மற்றும் உபயோகிக்கத்தகாத வாகனங்களை இனங்காண்பதற்காக விசேட சுற்றாய்வுச் சபையொன்றை நியமித்து இயங்கும் நிலையில் உள்ளபோதிலும் பொருளாதார ரீதியில் பயனற்ற அல்லது வேறு சில விஷேட விடயங்களின் காரணமாக அப்புறப்படுத்தப்பட வேண்டிய

		வாகனங்களை கண்டறிய வேண்டுமென்ற போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.
(உ)	பெறுகை வழிகாட்டுதல் கோவையின் 8.9.3	ஒப்பந்தங்களை வழங்கும்போது முறையான ஒப்பந்த உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், 09 சந்தர்ப்பங்களில், கட்டிடத் திணைக்களத்தின் முன் மதிப்பிடப்பட்ட தொகையான ரூ.480,719,000 ஒப்பந்தங்களுக்கு தொழில் திணைக்களம் பணம் செலுத்தியுள்ளது. கட்டிடத் திணைக்களம் மேற்படி பணியை கீழ் ஒப்பந்ததாரர்களுக்கு ரூ.272,689,000 பெறுமதியில் ஒப்படைத்திருந்ததுடன் இந்த செலவில் உள்ள வித்தியாசம் சேவை பெறுதல் பணி எனக் கூறயிருந்த போதிலும் இந்த செலவு பற்றிய பணிகள் தொடர்பில் தொழில் திணைக்களத்தின் முறையான மேற்பார்வை இடம்பெற்றிருக்கவில்லை.
(ஊ)	பெறுகை வழிகாட்டுதல் கொவையின் அத்தியாயம் 3	தொழில் திணைக்களம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் தேவையான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் 22 சந்தர்ப்பங்களில் கட்டிடத் திணைக்களத்திற்கு ரூ.346,651,027 பெறுமதியான 22 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.
(எ)	2019 செப்டம்பர் 27 ஆம் திகதிய 2142/90 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி	வர்த்தமானியின் விதிகளின்படி, தொழிற்சாலை பதிவு மற்றும் நீராவி கொதிகலன் பதிவு செயல்முறை என்பவற்றை முறையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வேலைத்திட்டம் மற்றும் மாவட்ட தொழிற்சாலை ஆய்வு பொறியியல் அலுவலகங்களில் தேவையான பணியாளர்கள் இல்லாமை காரணமாக குறைந்தபட்ச மட்டத்தில் இருந்தது.

2.4 ஒப்பந்தங்கள் தொடர்பான வரி அறவீடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழில் திணைக்களம் மற்றும் கட்டிட திணைக்களத்திற்கு இடையில், வேலைகளை நிறைவேற்ற ஒப்பந்தங்களுக்கு வருதல் மற்றும் வேலை நிறைவு பற்றிய நேரஅட்டவணைகள் இருக்காதமையினால் தாமதங்கள் ஏற்பட்டுள்ள

ஒப்பந்தங்கள் தொடர்பாக தாமதக் கட்டணம் வசூலிக்க எந்த வழிமுறையும் காணப்படவில்லை.

(ஆ) தொழில் திணைக்களத்தின் தொழில் செயலக கட்டிடத்தின் முதல் தளத்தின் உட்கட்டமைப்புக்காக 60,005,000 ரூபா 2022 மார்ச் 31 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததோடு இந்த கருத்திட்டத்தின் நோக்கத்திற்காக மெஹவர பியச கட்டிடத்தில் 12, 16 ஆகிய மாடிகளில் உள்ளக ஆக்கப்பணிகளுக்காக வழங்கப்பட்ட தொகையில் 37,632,000 ரூபாவும், மாற்றப்பட்டு சேரும் ரூ.99,637,000 ஒப்பந்தம் வழங்கப்பட்டாலும், 2023 டிசம்பர் 31 வரை மேற்படி பணிகளில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை.

2.5 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2023 டிசம்பர் 31 நிலவரப்படி திணைக்களத்தின் டெண்டர் வைப்புக் கணக்கின் மீதி ரூ.68,566,929 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ரூ.67,098,666 இரண்டு ஆண்டுகளுக்கு மேல் காலாவதியான வைப்புத்தொகையாகக் காணப்பட்டது. மேற்படி வைப்புதொகை மீதிகளுக்கு மத்தியில் ரூ.67,018,647 மீதி மெஹவர பியச கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வைப்புத் தொகை என்பது தெரியவந்தது.

(ஆ) மீளாய்வாண்டில், தொழில் திணைக்களம் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களுக்குச் சொந்தமான பொது வைப்புக் கணக்குகளில் ரூ.894,089,604 தீர்க்கப்படாத வைப்புத்தொகை அந்தந்த தனிநபர் கணக்குகளில் வரவு வைக்கப்படாமல் இருந்தது. இந்த நிலுவைகளில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை ரூ.71,131,941 ஆகவும், 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை ரூ.177,155,982 ஆகவும் இருந்தது.

3 தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 கருத்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மெஹவர பியச 04வது மாடியில் உள்ள சிற்றுண்டிச்சாலையின் உட்புற கட்டுமானத்திற்காக 2021 டிசம்பர் 30 ஆம் திகதி கட்டிடத் திணைக்களத்திற்கு ரூ.72,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2023 டிசம்பர் 31 வரை, இந்த வேலை செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இந்தத் தொகையில் ரூ.67,957,507 தொழில் திணைக்களத்திற்கு மீண்டும் பெறப்பட்டிருந்தது. இத்திட்டத்தில் எதிர்பார்த்த பணிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) கேகாலை மாவட்ட தொழில் அலுவலகத்தின் சேவை வசதிகளை மேம்படுத்துவதற்காக கட்டிட திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதி ரூபா 31,000,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பணி இன்னும் நிறைவடையவில்லை.

3.1.2 கருத்திட்டங்களை செயல்படுத்துவதிலான தாமதங்கள்

2021 ஆம் ஆண்டில் கட்டிட திணைக்களத்திற்குச் சாட்டப்பட்ட ரூ.127,687,802 பெறுமதியான 06 கட்டுமான ஒப்பந்தங்களில் ரூ.48,663,802 பெறுமதியான 4 பணிகளும் முடிக்கப்பட்டிருக்கவில்லை. ரூ.72,000,000 செலவு மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்ட மெஹவர பியச 4-வது மாடி சிற்றுண்டிச்சாலையின் உட்புற ஆக்கப்பணிகள் நிறைவடைந்திருக்கவில்லை என்பதோடு அந்த ஒதுக்கீட்டில் இருந்து, மெஹவர பியச கட்டிடத்தின் பிரதான அறையின் பிரித்தல் பாகங்களை தயாரிப்பதற்காக ரூ.3,968,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

3.2 சொத்துகளின் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தின் அச்சுப் பணிகளை மேற்கொள்வதற்காக, 2007 டிசம்பரில் ரூ.21,884,083 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட அச்சு இயந்திரம் திணைக்களத்தின் அச்சகத்தில் இருந்ததோடு ஜாவத்தை வளாகத்தில் அமைந்துள்ள இந்த அச்சகத்தில் செயற்பாட்டிலுள்ள கணினி, மடிக் கணினி, கட்டும் இயந்திரம் மற்றும் கடதாசி வெட்டும் இயந்திரம் (Paper Cutter) என்பவை காணப்பட்டன. இந்த அச்சகத்தின் அச்சகப் பிரிவில் பணிகளைச் செய்ய நிரந்தர பணியாளர்கள் மற்றும் மூலப்பொருட்கள் இல்லாததால் அந்த வளங்கள் 2018 முதல் பயன்படுத்தப்படாமல் உள்ளன. அதன்படி, படிவங்களை அச்சிடாததன் மூலம், 2019-2022 ஆம் ஆண்டுக்கான படிவங்களை வெளி தரப்பினரிடமிருந்து பெறுவதற்கு ரூ.36,236,875 செலவு செய்யப்பட்டிருந்தது. 2023ஆம் ஆண்டு முதல்

பயனாளிகள் மூலம் படிவங்களை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஹம்பாந்தோட்டை மாவட்ட தொழில் அலுவலகம் மற்றும் சுற்றுலா பங்களா ரூ.7,855,576 செலவில் புனரமைக்கப்பட்ட போதிலும், தேவையான மர தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாததால் சுற்றுலா பங்களா பயன்படுத்தப்படாமல் இருந்தது.

3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2023 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தின்படி, மூலதனச் சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்துதலின் கீழ் 4 முன்னுரிமைப் பணிகளுக்காக ரூ.405,000,000 ஒதுக்கப்பட்டிருந்தாலும், அவற்றில் 3 பணிகள் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் முன்னேற்ற அறிக்கைகளின்படி மதிப்பீடுகள் தயாரிக்கும் நிலையில் உள்ளன. இது 2024 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) கம்பஹா மாவட்ட புதிய தொழில் அலுவலகத்தின் பிரிப்புப் பாகங்கள் தயாரிக்கப்படுதல் மற்றும் வலையமைப்பு முறைமை தயாரிக்கப்படுதல் என்பவற்றுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூ.4,000,000 மதிப்பீடு செய்யப்பட்டு 2023 டிசம்பர் 27 ஆம் திகதி ரூ.11,727,646 ஒதுக்கீடு கம்பஹா மாவட்ட செயலாளருக்கு விடுவிக்கப்பட்ட போதிலும் அப்பணி 2024 மே வரை முடிக்கப்பட்டிருக்கவில்லை.

(c) 2023ஆம் ஆண்டு கொக்கல விடுதியில் உள்ள கழிவறைத் தொகுதியைச் சீரமைக்க ரூ.6,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகள் முடிக்கப்படவில்லை.

(ஈ) மெஹவர பியசவின் 16வது தளத்தின் உள்ளக ஆக்கங்களைத் தயாரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.30,000,000 மதிப்பீட்டுத் தொகையை அதற்காக பயன்படுத்தப்படாமல், 8, 9, 10, 11 மற்றும் 12வது தளங்களில் உள்ளக ஆக்கங்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும் அந்தப் பணி முடிக்கப்படவில்லை.

(இ) மெஹவர பியசவின் பொது வசதிகள் மற்றும் கழிவு முகாமைத்துவம், பெயர்ப் பலகைகள், விருந்தினர் அடையாள அட்டைகள் போன்ற வசதிகளை பெறுவதற்காக 55,000,000 ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு உள்ள போதிலும், மதிப்பீடுகளைத் தயாரித்தல், கலந்துரையாடல்கள் மற்றும் விலைமனுக் கோரல் கட்டங்களில் இருப்பதாக வெளிக்கொணரப்பட்டது.

4. நல்லாட்சி

4.1 பொது மக்களுக்கு சேவைகளை வழங்குதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2018 (1) சுற்றறிக்கைகளுக்கு இணங்க பிரஜைகள்/சேவைபெறுநர் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி சற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் படி சாசனத்தை செயல்படுத்துவதை கண்காணித்து மதிப்பிடுவதற்கான முறையியல் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) 2018 ஜனவரி 24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 01 இன் படி, அனைத்து ஊழியர்களுக்குமான வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

எச்.எம்.டி சொய்சா,

சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமையதிபதி,

கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குப் பதிலாக

நான்காம் அத்தியாயம்

செயலாற்றுகைச் சுட்டிகள்

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

விசேட சுட்டிகள்	எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு			
	100% - 90%	75% - 89%	74% - 50%	<50%
1 ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைச் செலுத்துவதற்கான தீர்மானக்கடிதங்களை 14 நாட்களுக்குள் அனுப்பியதன் சதவீதம			69%	
2 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையை குழந்தைத் தொழிலாளர் இல்லாத நாடாக மாற்றும் நிலையான இலக்கை முதலாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கான இலக்கு நடவடிக்கைகளின் சாதனைச் சதவீதம்	100%			
3 கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிறுவனங்களில் தாபிக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதார குழுக்களின் எண்ணிக்கையின் சதவீத வளர்ச்சி		80%		
4 திணைக்களத்தின் செயல்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்த குறைந்தபட்ச 03 வேலை செயல்முறைகளை எளிமைப்படுத்துதல்	91%			
5 மொத்த ஊழியர்களில் பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கையின் சதவீதம்			66%	

ஐந்தாம் அத்தியாயம்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDGs) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDGs) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

5.1 இனங்காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

இலங்கை 2030 ஆம் ஆண்டளவில் அடைய வேண்டிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கு மத்தியில் தொழில் திணைக்களத்தின் பணியின் பிரகாரம் திணைக்களத்திற்கு நேரடியாக ஏற்புடையதாக அமைவது 08 வது குறிக்கோளாகும். அதாவது,**அனைவருக்கும் நிலையான, முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையான ஆக்கவிளைவுடன்கூடிய மற்றும் ஆரோக்கியமான தொழில் வாய்ப்புகளை ஊக்குவித்தல்** எனும் குறிக்கோளாகும். அதன்படி தொழில் திணைக்களத்தின் நோக்கு மற்றும் பணி என்பன இந்த குறிக்கோளுடன் இசைவாக்கம் அடைவதோடு திணைக்களத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்குமான இறுதி வெளியீடு இந்தக் குறிக்கோளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதாகும். அவ்வகையில் நோக்கும்போது திணைக்களத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தின் மூலம் 08வது குறிக்கோளை அடைந்து கொள்வதன் முன்னேற்றம் தெளிவாகத்தெரிகின்றது.

இவற்றைத் தவிர 01 ஆம் குறிக்கோளாகிய அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற அனைத்து வகையான வறுமையையும் முடிவுக்குக் கொண்டு வருதல், 05வது குறிக்கோளாகிய பால்நிலை சமத்துவத்தை அடைந்து அனைத்துப் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுதல் மற்றும் 16 வது குறிக்கோளாகிய நிலைபேறான அபிவிருத்தியின் நிமித்தம் அமைதியானதும் முழுமையானதுமான சமூகங்களை உருவாக்குதல், நீதிக்கான வாய்ப்பினை சகலருக்கும் வழங்குதல் மற்றும் சகல மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புடன்கூடிய முழுமையான நிறுவனங்களை உருவாக்குதல் ஆகிய குறிக்கோள்களும் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு அமைய பொருத்தமானவாறு ஏற்புடையதாக அமையும்.

5.2 **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகளும் சவால்களும்**

இலக்கு / நோக்கம்		**இலக்குகள்**		**வெற்றிச் சுட்டிகள்**		**2023.01.01 முதல் 2023.12.31 வரைவெற்றிபெறுவதன் முன்னேற்றம்**
01	அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற அனைத்து வகையான வறுமையையும் முடிவுக்குக் கொண்டு வருதல்	1.1	2030 ஆம் ஆண்டளவில் உலகின் சகல இடங்களிலும் வாழ்கின்ற மக்களின் தீவிரமான வறுமையை இல்லாதொழித்தல். இன்றைய மதிப்பீட்டின் பிரகாரம் நாளொன்றுக்கு 1.25 டொலரை விடக் குறைந்த வருமானம் பெறும் மக்கள் தீவிரமான வறுமையைக் கொண்டுள்ள குழுவில் உள்ளடங்குவர்.	1.1.1	பால்நிலை, வயது, தொழில் வாய்ப்பு மட்டம் மற்றும் புவியியல் அமைப்பு (நகர, கிராம) ஆகிய காரணிகளுக்கு ஏற்ப சர்வதேச வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களின் விகிதம்	பாதுகாப்புச் சேவைகள் தொழில்துறை மற்றும் சுத்திகரிப்புச் சேவை தொழில்துறையில் சமபளக் கணிப்பீடு குறித்த பொதுவான வழிகாட்டுதல்களின் தொகுப்பு ஒன்றை வரைவு செய்வதற்கு ஒரு குழு நடவடிக்கை எடுத்தது.
05	பால்நிலை சமத்துவத்தை அடைந்து அனைத்துப் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுதல்	5.1	பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிராக சகல இடங்களிலும் இடம்பெறுகின்ற சகல விதமான பாகுபாடு காட்டப்படுதல்களையும் இல்லாதொழித்தல்	5.1.1 .	பால் நிலை சமத்துவம் மற்றும் பாகுபாடு காட்டப்படாமையை மேம்படுத்தப்படுவதனை வலுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான சட்டக் கட்டமைப்பு உள்ளதா இல்லையா என்பது.	• ”அவளே தேசத்தின் பெருமை” எனும் தொனிப்பொருளைக் கொண்ட 2023.03.08ஆம் திகதி கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தினத்திற்கு ஒருங்கமைவாக தொழில் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின கொண்டாட்ட நிகழ்ச்சி 2023.03.16 ஆம் திகதி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணாயக்கார அவர்களின் தலைமையில் நடைபெற்றது.
		5.2	மனித வஞ்சக் கடத்தல் பாலியல் மற்றும் ஏனைய வகையிலான துஷ்பிரயோகங்கள்	5.2.1	கடந்த 12 மாத காலப்பகுதியில், துன்புறுத்தலின் தன்மை மற்றும் வயதின் பிரகாரம்	

			உள்ளடங்களாக பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிராக பொது மற்றும் தனிப்பட்ட இடங்களில் இடம்பெறுகின்ற அனைத்து வகையான வன்முறைகளையும் இல்லாதொழித்தல்		வாழ்க்கைத் துணை இருந்த/இருக்கின்ற, 15 வயதுக்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளுக்கு மத்தியில் உடல், பாலியல் அல்லது உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளான அளவு	• இரவு நேரப் பணிகளில் பெண்களை பணியமர்த்துவதற்கான நிபந்தனைகளை மீறியமை தொடர்பாக கிடைக்கப்பெற்ற 14 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. • பெண்களை இரவு நேரப் பணிகளில் ஈடுபடுத்தும் நிறுவனங்களில் விசேட குழு சோதனைகள் 508 நிறுவனங்களை உள்ளடக்கி நடத்தப்பட்டது.
		5.6 இ.	பால்நிலை சமத்துவம் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுவதற்காக சாதகமான கொள்கைகளை பயன்படுத்துதல், மற்றும் வலுவூட்டுதல் மற்றும் சட்டத்தை செயல்படுத்துதல்	5. இ.1	பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதனை இனங் காண்பதற்காக மற்றும் அரச நிதி ஒதுக்கீடுகளை கொண்ட முறைகள் காணப்படுகின்ற நாடுகளின் எண்ணிக்கை	
8	அனைவருக்கும் நிலையான, முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையான ஆக்கவிளைவுடன்கூடிய மற்றும் ஆரோக்கியமான தொழில் வாய்ப்புகளை ஊக்குவித்தல்	8.5.	2030 ஆம் ஆண்டளவில் அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளடங்களாக அனைத்துப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் பயனுள்ள மற்றும் கண்ணியமான தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்	8.5.1	தொழில், வயது மற்றும் அங்கவீனமுற்ற ஆட்கள் எனும் காரணிகளின் அடிப்படையில் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களின் ஒரு மணித்தியால சாதாரண வருமானத்தை ஈட்டுதல்	தொழில் சட்டங்களின்படி, தனியார் மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் சராசரி ஒரு மணித்தியால வருமானம் தொழில், வயது மற்றும் ஊனமுற்ற நபர்கள் எனும் காரணிகளின் பிரகாரம் அல்லது பால் நிலை ஆகியவற்றால் வேறுபடமாட்டாது.
				8.5.2	பால்நிலை, வயது மற்றும் அங்கவீனமுற்ற ஆட்களுக்குரியதான தொழில் இன்மை விகிதம்	

		8.7	பலாத்காரமாக தொழில் பெறுவதனை இல்லாதொழிப்பதற்காக உடனடியாக பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பெண்களை அடிமைத் தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் மனித வஞ்சக் கடத்தலை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் சிறுவர் போராளிகளாக ஆட்சேர்ப்பு செய்யப்படுதல் உள்ளடங்களாக மிகவும் மோசமான வகையில் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதனை தடைசெய்தல் மற்றும் இல்லாதொழித்தல் மற்றும் 2025 ஆம் ஆண்டளவில் அனைத்து வகையான சிறுவர் தொழிலாளர்களையும் பயன்படுத்துவதனை முடிவுறுத்துதல்.	8.7.1.	பால்நிலை மற்றும் வயது என்பவற்றின் அடிப்படையில் 5 -17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்கள் தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ள அளவு மற்றும் எண்ணிக்கை	• 2025 ஆம் ஆண்டாகும்போது இலங்கையை குழந்தை தொழிலாளர்களற்ற நாடாக மாற்றும் நிலையான இலக்குடன் 2023 ஆம் ஆண்டில் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில் (காலி, கம்பஹா, புத்தளம், மாத்தறை, பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, களுத்துறை மற்றும் திருகோணமலை) குழந்தைத் தொழிலாளர்கள் தொடர்பில் ஆபத்தான பகுதியைக் கண்டறிந்து, அந்தப் பகுதியில் 2023 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. • 2023 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் தொடர்பாக பெறப்பட்ட 144 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டன. குழந்தைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்ட 12 முறைப்பாடுகளில் 06 முறைப்பாடுகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், எஞ்சிய 06 முறைப்பாடுகள் தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
		8.8.	தொழிலாளர்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்தல், குறிப்பாக புலம்பெயர் பெண்களை உள்ளிட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் ஆபத்து மிக்க	8.8.1.	பால்நிலை மற்றும் புலம்பெயர் தன்மையின் பிரகாரம் தொழில் சார்ந்ததாக மரணம் ஏற்படுத்தக்கூடிய மற்றும் மரணம் ஏற்படுத்தாத	• 2023 ஆம் ஆண்டில், பணியிடங்கள் சார்ந்ததாக 64 மரண விபத்துகளும், 1479 உயிரிழப்பு அல்லாத விபத்துகளும் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. இவ்விபத்துகளை திணைக்களம் ஆராய்ந்து உரிய சட்ட நடவடிக்கைகளை

			தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் உள்ளடங்கலாக பணிபுரியும் அனைவருக்காகவும் பாதுகாப்பான பணி இடங்களுடன் கூடிய சூழல்களை மேம்படுத்துதல்		விபத்துக்கள் இடம்பெறும் விகிதங்கள்	மேற்கொண்டுள்ளதுடன் விபத்துக்கான காரணங்களைக் கண்டறிந்து மீண்டும் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறாத வகையில் செயற்படுமாறு தொழில்தருநர்களுக்கு விழிப்புணர்வு செய்துள்ளது. அதன்படி, அந்த ஆண்டில், தொழிற்சாலை கட்டளைச் சட்டத்தை மீறிச் செயல்பட்ட 37 தொழில்தருநர்களுக்கு எதிராக திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுத்தது. • ஒருங்கு சேர்வதற்கான மற்றும்பேரம் பேசுவதற்கான சுதந்திரத்தை மேம்படுத்துவதற்காக தொழிற் சங்கங்களை அமைக்கவும், பேணிச்செல்லவும் அதன்படி தமது உரிமைகள் தொடர்பில் செயற்படவும் ஊழியர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் 128 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. அந்த தொழிற்சங்கங்கள் உட்பட, 2023.12.31இல் இலங்கையில் காணப்பட்ட செல்லுபடியாகும் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 2122 ஆகும்.
				8.8.2.	பால்நிலை மற்றும் புலம்பெயர் மட்டத்தின் பிரகாரம் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆவண மூலங்கள் தேசிய அரசியலமைப்பு என்பவற்றின் அடிப்படையில் தொழிலாளர் உரிமைகள்(ஒன்று கூடுவதற்கான மற்றும் கூட்டு பேரம் பேசுவதற்கான சுதந்திரம்) தொடர்பாக உள்ள தேசிய இசைவாக்கத்தின் மட்டம்.	

5.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகளும் சவால்களும்

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட சமூக-பொருளாதார நெருக்கடிகளின் தாக்கம் காரணமாக, 2023 ஆம் ஆண்டு அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களின்படி தொழில் திணைக்களத்தின் செலவினங்களை மட்டுப்படுத்த வேண்டியிருந்தது. அதன்படி, வருடத்தில் மேற்கொள்வதற்கு இலக்காகக் கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளின் இலக்குகளை அடைவது திணைக்களத்திற்கு கடினமாக இருந்தது.

ஆறாம் அத்தியாயம்

மனிதவள தோற்றப்பாடு

மனிதவள தோற்றப்பாடு

6.1 மனிதவள முகாமைத்துவம்

பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	2023.12.31 ஆம் திகதியில் உண்மையான அளவு	வெற்றிடங்களின் எண்ணிக்கை
சிரேஸ்ட	211	143	68
மூன்றாம் நிலை	668	462	206
இரண்டாம் நிலை	1753	1786	-33
ஆரம்ப நிலை	489	420	69
மொத்தம்	**3121**	**2811**	**310**

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையின்மீது மனித வள பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியுள்ள விதம்

- 143 தொழில் அலுவலர் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளதோடு, இது கள ஆய்வு மற்றும் முறைப்பாடுகளை விசாரிப்பதன் வினைத்திறன் மீது ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் 206 பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளதால், திணைக்களத்தின் அன்றாட செயற்பாடுகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதிப் பிரிவின் அனுகூலங்களைச் செலுத்தும் கடமைகளின் வினைத்திறன் பாதிக்கப்பட்டுள்ளது.
- சட்ட அலுவலர் பணியிடம் வெற்றிடமாக உள்ளதால், வழக்குகளின் வினைத்திறன் பாதிக்கப்பட்டுள்ளது.
- இலங்கை பொறியியல் சேவை மற்றும் இலங்கை நிர்வாக சேவை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் காரணமாக மேற்பார்வை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் சில பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

6.3 மனித வள அபிவிருத்தி

திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் அவர்களின் தொழில்சார் அறிவு, ஆற்றல் மற்றும் மனோபாவ விருத்தி போலவே அவர்களின் கடமைகளை நிறைவேற்றும் வினைத்திறன் மற்றும் ஆக்கவிளைவு என்பவற்றின் மேம்பாடு பிரதான நோக்கமாகக் கொள்ளப்படுகின்றன. அதேவேளை, திணைக்களம் கொண்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் வளங்கள் என்பவற்றை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து நவீன தொழில்நுட்பத்தை தமது கடமைகளுக்காக பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களை தூண்டுவதற்கும் பொது மக்களுக்கு மிகவும் நெருக்கமான சேவையை வழங்குவதற்காக உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சியினை

மேம்படுத்துவதற்கும் திணைக்களத்தில் பயனுள்ள இடைத் தொடர்புகளை உருவாக்குவதற்கும் இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன. அதன் பிரகாரம் அரச சேவையில் அதிகளவு அனுபவமிக்க, வினைத்திறன் மிகு மற்றும் திருப்தியுடன்கூடிய உத்தியோகத்தர் குழுவொன்றை உருவாக்குவது இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இடம்பெறுகின்றது.

2023 ஆம் ஆண்டில் திணைக்கள உத்தியோகத்தர்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி பாடநெறிகளில் பங்கேற்பு பின்வருமாறு அமைகின்றது.

அட்டவணை 6.1- 2023 இல் உள்நாட்டுப் பயிற்சியில் பங்குபற்றியமை								
தொ .இ.	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை		நிகழ்ச்சித்திட்டத்தின் காலப் பகுதி	மொத்த முதலீடு ரூ.		நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு /வெளிநாட்டு)	வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு
		பதவி	எண்ணிக்கை		உள்நாட்டு	வெளி நாட்டு		
திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்								
1	இலங்கை நிர்வாக சேவையின் புதிய உதவித் தொழில் ஆணையாளர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சி	புதிய உதவித் தொழில் ஆணையாளர்கள்	2	2023.01.02, 2023.01.03 மற்றும் 2023.01.04			உள்நாட்டு	கடமை நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவை வழங்குதல் மற்றும் சேவை ஆரம்பப் பயிற்சியைவழங்குதல்.
2	புதிய முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சிப் பட்டறை	புதிய முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்	16	2023.01.18, 2023.01.19, 2023.01.20 மற்றும் 2023.01.23	34,610.00		உள்நாட்டு	கடமைகளுக்குத் தேவையான அறிவை வழங்குதல் மற்றும் சேவை ஆரம்பப் பயிற்சியை வழங்குதல்..
3	வலயங்கள் மற்றும் அதன் கீழுள்ள மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களில் பிரதித் தொழில்ஆணையாளர்கள்,உதவித்	ஊவா வலயம்,மேற்கு வலயம்III,வட மேற்கு வலயம்,மத்திய வலயம் மற்றும் வட மத்திய வலயம்	53	2023.01.27, 2023.01.28 மற்றும் 2023.01.29	406,610.00		உள்நாட்டு	தொழில் சட்டங்கள் தொடர்பான சமீபத்திய திருத்தங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும்

	தொழில்ஆணையாளர்கள் மற்றும் சிரேஸ்ட தொழில் அலுவலர்களுக்கான வதிவிட பயிற்சிப் பட்டறை	மற்றும் அதன் கீழ் உள்ள மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள் (பிரதித் தொழில் ஆணையாளர்கள்), உதவித் தொழில்ஆணையாளர்கள் மற்றும் சிரேஸ்ட தொழில் அலுவலர்கள்)						ஊழியர் சேமலாப நிதியத்தின் தரவு முறைமைகளின் பயன்பாடு பற்றிய அறிவை இற்றைப்படுத்துதல்.
4	பொது வைப்புக் கணக்கை இற்றைப்படுத்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வலயங்கள்,மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் கிளைத் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள்	Zoom ஊடகம் வாயிலாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்	2023.02.20			உள்நாட்டு	பொது வைப்புக் கணக்கை இற்றைப்படுத்தி பேணிவருதல்
5	வழக்குப் பதிவேட்டை பேணிவருதல் தொடர்பாகஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்	மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் கிளைத் தலைவர்கள் மற்றும்	Zoom ஊடகம் வாயிலாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்	2023.02.28			உள்நாட்டு	வழக்குப் பதிவேட்டை பேணிவருதல் தொடர்பானஅறிவு விருத்தி

		சம்பந்தப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள்						
6	தொழில் ஆணையாளர் கணக்கைத் தீர்த்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை நடத்துதல்	வலயங்கள்,மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் கிளைத் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள்	Zoom ஊடகம் வாயிலாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்	2023.03.09			உள்நாட்டு	தொழில் ஆணையாளர் கணக்கைத் தீர்த்தல் தொடர்பானஅறிவு விருத்தி
7	தொழில்அலுவலர்களை விழிப்புணர்வூட்டும்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத் தொடர் -2023	தொழில்அலுவலர்கள் அனைவரும்	178	2023.03.10, 2023.03.17, 2023.03.24 மற்றும் 2023.03.31	544,980.00		உள்நாட்டு	தொழில்சோதனை செயல்முறையை முறையாக மேற்கொள்ளல் ,ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையின்படி ஊழியர்களின் முறைப்பாடுகளை விசாரிக்கும் முறையியல்,அறிமுகப் படுத்தப்பட்ட புதிய தொழில்சட்டங்கள்,வழக்குத் தொடுத்தல் பற்றிய அறிவைப் இற்றைப்படுத்தல்

8	ஊ.சே.நி. செலுத்தல் பிரிவின் செயற்பாடுகள் குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	ஊ.சே.நி. செலுத்தல் பிரிவின்பணம் செலுத்தும் கவுண்டர்களில் பணிபுரியும் புதிய உத்தியோகத்தர்கள்	Zoom ஊடகம் வாயிலாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்	2023.04.04			உள்நாட்டு	ஊழியர் சேமலாப நிதியப் பிரிவின் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திறமையாக வழங்குதல்
9	ஊழியர் சேமலாப நிதியப் பிரிவின்செயற்பாடுகள் குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்(சிங்கள மொழி மூலம்)	ஊ.சே.நி. 30%ஒய்வூதியத்திற்கு முந்தைய அனுகூலங்கள் செலுத்தப்படுதல்,மரணித்த உறுப்பினர்களின் சட்டப்பூர்வ மரபுரிமையாளர்களுக்கு அனுகூலங்களைச் செலுத்துதல் மற்றும்AH/Dஅட்டைப் பதிவு தொடர்பானஉத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	Zoom ஊடகம் வாயிலாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்	2023.04.04			உள்நாட்டு	ஊழியர் சேமலாப நிதியப் பிரிவின் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திறமையாக வழங்குதல்
10	தொழில் அலுவலர்களை விழிப்பூட்டுவதற்கான தொடர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் -2023	அனைத்து தொழில் அலுவலர்கள்	179	2023.05.19, 2023.05.25,2023.06.02 மற்றும் 2023.06.09	473,360.00		உள்நாட்டு	தொழிலாளர்சோதனைச் செயன்முறையை முறையாக மேற்கொளளல்,ஏற்றுக் கொள்ளப்பட்ட

								நடைமுறையின்படி ஊழியர்களின் முறைப்பாடுகளைவிசாரிப்பதற்கான முறையியல், அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில் சட்டங்கள், வழக்குத் தொடுத்தல் முதலியன தொடர்பான அறிவைப் இற்றைப்படுத்தல்
11	E – ROCமுறைமை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	மாவட்ட உதவித் தொழில்ஆணையாளர்கள்,உப தொழில் அலுவலகங்களுக்குப் பொறுப்பான சிரேஸ்ட தொழில்அலுவலர்கள், அந்த அலுவலகங்களில் விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள்	Zoom ஊடகம் வாயிலாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்	2023. 05. 23			உள்நாட்டு	தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் தகவல்E-ROCமுறைமையில் பெற்றுக்கொள்வதற்கானஇயலுமை அதிகரித்தல்
12	முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமையைசெயல்படுத்துவது குறித்து	ஊழியர் சேமலாப நிதிப் பிரிவு,வலய தொழில் அலுவலகங்கள்,மாவட்ட தொழில்	Zoom ஊடகம் வாயிலாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்	2023.06.13			உள்நாட்டு	முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமையின் பயன்பாடு பற்றிய அறிவு விருத்தி,

	அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்	அலுவலகங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்களின் தொடர்புடைய அலுவலர்கள்						நடைமுறையில் எழும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பற்றி கலந்துரையாடுதல்
13	அலுவலக உதவியாளர்களுக்கான சேவை ஆரம்ப பயிற்சிப் பட்டறை -	அலுவலக உதவியாளர்களாக உள்ளீர்க்கப்பட்டப ல்தொழிற்பாட்டு உத்தியோகத்தர்கள்	25	2023.06.14	19,250.00		உள்நாட்டு	கடமை நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவை வழங்குதல் மற்றும் சேவை ஆரம்பப் பயிற்சியைவழங்குதல்.
14	ஊழியர் சேமலாப நிதிகண்காணிப்பு முறைமை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	ஊழியர் சேமலாப நிதிகண்காணிப்பு முறைமையைக் கையாளும் அலுவலர்கள்	Zoom ஊடகம் வாயிலாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்	2023.07.18			உள்நாட்டு	ஊழியர் சேமலாப நிதிகண்காணிப்பு முறைமை பற்றிய அறிவு விருத்தி
15	கௌரவ அமைச்சரின் தலைமையில் நடுத்தீர்ப்பாளர்களுக் கான முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பயிற்சிப் பட்டறை	நடுத்தீர்ப்பாளர்கள்	53	2023.09.16	73,240.00		உள்நாட்டு	நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் வினைத்திறன்மிக்கதா க அமைதல்

16	வலயங்கள் மற்றும் அதன் கீழுள்ள மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் பிரதித் தொழில் ஆணையாளர்கள், உதவித் தொழில் ஆணையாளர்கள் மற்றும் சிரேஸ்ட தொழில் அலுவலர்களுக்கான வதிவிட பயிற்சிப் பட்டறை – வடகிழக்கு வலயங்கள்	வடக்கு மற்றும் கிழக்கு வலயங்கள் மற்றும் அதன் கீழுள்ள மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் அலுவலர்கள் (பிரதித் தொழில் ஆணையாளர்கள், உதவித் தொழில் ஆணையாளர்கள் மற்றும் சிரேஸ்ட தொழில் அலுவலர்கள்)	37	2023.10.14 மற்றும் 2023.10.15	268,625.00		உள்நாட்டு	தொழில் சட்டங்கள் தொடர்பான சமீபத்திய திருத்தங்கள் தொடர்பாக அலுவலர்கள் விழிப்புணர்வடைதல், மற்றும் ஊழியர் சேமலாப நிதிதரவு முறைமைகளின் பயன்பாடு பற்றிய அறிவைப் இற்றைப்படுத்தல்
17	புதிய முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்கான சேவை ஆரம்ப பயிற்சிப் பட்டறை	புதிய முகாமைத்துவ சேவை அலுவலர்கள்	58	2023.10.16, 2023.10.17 மற்றும் 2023.10.18	74,010.00		உள்நாட்டு	கடமை நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவை வழங்குதல் மற்றும் சேவை ஆரம்பப் பயிற்சியை வழங்குதல்.
18	தொழில் திணைக்களத்தின் சட்ட அலுவலர்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களில் வழக்குகளை நெறிப்படுத்தும் அலுவலர்களுக்காக நீதவான் நீதிமன்ற	அனைத்து நீதவான் நீதிமன்றங்களிலும் வழக்குகளைக் கையாளும் அலுவலர்களுக்கா க	15	2023.10.21	38,149.00		உள்நாட்டு	நீதவான் நீதிமன்ற செயல்முறை குறித்த பயிற்சிவழங்கப்படுதல்

	செயல்முறை குறித்த பயிற்சிவழங்கப்படுதல்							
19	முகாமைத்துவ சேவை அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக் கான அலுவலக நடைமுறைகள் மற்றும் தாபன விதிக்கோவை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	முகாமைத்துவ சேவை அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்	63	2023.11.07	25,880.00		உள்நாட்டு	நாளாந்த கடமைகளை திறம்பட மேற்கொள்ளத் தேவையான அறிவு இற்றைப்படுத்தப்படுத ல்
20	ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் நடவடிக்கைகள் குறித்த பயிற்சி நிகழ்சித் திட்டம் (தமிழ் மொழிமூலம்)	ஊ.சே.நி. 30%செலுத்தல் பிரிவின் நடவடிக்கைகள், L பிரிவின் நடவடிக்கைகள்,A H/Dஅட்டைப் பதிவு தொடர்பாகவும் ஊ.சே.நி.கடன் நடவடிக்கைகள் தொடர்பாகவும் தொடர்புடையவிட யப் பொறுப்பு அலுவலர்கள்	Zoom ஊடகம் வாயிலாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்	2023.11.28			உள்நாட்டு	ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் செயல்பாடுகள் பற்றிய அறிவு விருத்தி
21	தொழிலாளர் திணைக்களத்தில் அலுவல் மொழிக் கொள்கையை	நிறைவேற்றுதர அலுவலர்கள்	71	2023.12.11			உள்நாட்டு	அலுவல் மொழிக் கொள்கை பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும்

	நடைமுறைப்படுத்துவது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி							
22	தொழில் திணைக்களத்தின் தலைமையகத்திலும் பிராந்திய தொழில் அலுவலகங்களிலும் முன் சேவைபெறுநர் கூடங்களில் (Front Office) ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	சேவைபெறுநர் முன் கூடங்களில் (Front Office) ஈடுபட்டுள்ள அலுவலர்கள	80	2023.12.20	98,150.00		உள்நாட்டு	சேவைபெறுநர்களுடன் இடைத்தொடர்புகளை விருத்தி செய்வதற்குத் தேவையான தொடர்பாடல் திறன்களின் மேம்பாடு
23	தொழில்துறை பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரம் பற்றிய ஒருங்கிணைந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	தொழில் அலுவலர்கள்	80	2023.12.21 மற்றும் 2023.12.22	177,360.00		உள்நாட்டு	தொழில்துறை பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரம் பற்றிய அறிவின் விருத்தி
24	பொது சாட்சியப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிச்செல்லல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	மேற்கு வலயங்கள்I, IIமற்றும்IIIஆகிய வலயங்கள் மற்றும் அதன் கீழுள்ள மாவட்ட தொழில் அலுவலகங்களின் பிரதான முகாமைத்துவ	28	2023.12.28	21,850.00		உள்நாட்டு	பொது சாட்சியப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிச்செல்லல்

		சேவை அலுவலர்கள் மற்றும் கிளைத் தலைவர்கள்						
25	தொழில் திணைக்களத்தின் புதிய உதவித் தொழில் ஆணையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	2020 மற்றும் 2023 இல் பணியமர்த்தப்பட்ட உதவித் தொழில் ஆணையாளர்கள் (திணைக்களம்)	17	2023.12.18 மற்றும் 2024.01.05 (10 days)	518,396.00		உள்நாட்டு	கடமை நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவை வழங்குதல் மற்றும் சேவை ஆரம்பப் பயிற்சி வழங்குதல்.
26	பொ.நி.சு. 18/2020 இன்படி தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	நிறைவேற்றுதர அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்	254	மணித்தியால நிகழ்ச்சித்திட்டம் 01 மற்றும் 150 மணித்தியால நிகழ்ச்சித்திட்டங்கள் 02	375,000		உள்நாட்டு	கடமை நடவடிக்கைகளுக்குத் தேவையான தமிழ் அறிவின் மேம்பாடு
வெளி பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுவதற்காக உத்தியோகத்தர்களை ஆற்றுப்படுத்துதல்								
செயலமர்வுகள்								
1	இ- நூலகத்தை மேம்படுத்திக்கொள்ளல்	நூலகர்	1		2,500.00		உள்நாட்டு	நூலகத்தின் நடவடிக்கைகள் வினைத்திறனடைதல்
2	போக்குவரத்து முகாமைத்துவம்	அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும்	2		12,000.00		உள்நாட்டு	போக்குவரத்து முகாமைத்துவம் வினைத்திறனடைதல்

		முகாமைத்துவ சேவை அலுவலர்						
3	உள்ளக கணக்காய்வு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள்	உள்ளக கணக்காய்வுமற்றும் நிதிப் பிரிவுகளில் முகாமைத்துவ சேவைகள் அலுவலர்கள்	4		38,000.00		உள்நாட்டு	உள்ளக கணக்காய்வுநடவடிக் கைகள் பற்றிய அறிவு விருத்தி
4	பெறுகைத் திட்டங்களை தயாரித்தல்	தொழில் ஆணையாளர், பிரதித்தொழில் ஆணையாளர் மற்றும் கணக்காளர்	5		60,000.00		உள்நாட்டு	பெறுகைத் திட்டங்களை தயாரித்தல் பற்றி அறிவை வளர்த்தல்
டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு ஆகியவற்றுக்காக ஆற்றுப்படுத்துதல்								
1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் பற்றியபட்டப்பின் படிப்பு	உதவித் தொழில்ஆணையா ளர்கள்	4		345,000.00		உள்நாட்டு	உத்தியோகத்தர்களின் கடமைகளுக்குத் தேவையான அறிவு விருத்தியடைதல்
2	சட்டம் பற்றிய பட்டப்பின் படிப்பு	உதவித் தொழிலாளர் ஆணையாளர்	1		250,000.00		உள்நாட்டு	
3	பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா	கணக்காளர்	1		69,000.00		உள்நாட்டு	
இந்த பயிற்சி குழுக்கள் தவிர, திணைக்களத்தின் 22 உத்தியோகத்தர்கள் வெளி நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 05 செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் அறிவுப் பகிர்வு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.								

அட்டவணை 6.2 - 2023 இல் வெளிநாட்டுப் பயிற்சியில் பங்குபற்றியமை					
தொ. இ.	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை		நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி	மொத்த முதலீடு ரூ.
		பதவி	எண்ணிக்கை		
01	Work shop on organizational Innovation Management on key standards and frame works 20-22 February 2023	உதவித் தொழில் ஆணையாளர்	1	2023.02.20 முதல் 2023.02.22 வரை	இணையவழிப் பயிற்சி
02	International Tripartite Meeting on Supporting Grass Roots Activities through the International Employers and Network (Cambodia)	தொழில் ஆணையாளர் நாயகம்	1	2023.02.16 முதல் 2023.02.17 வரை	வெளிநாடு
03	Seminar on Implementing 2030 Agenda for Sustainable Development for Developing Countries Women and children	பிரதித் தொழில் ஆணையாளர்	1	2023.04.22 முதல் 2023.05.05 வரை	வெளிநாடு
04	Specialized Programme on Big Data Technologies and Machine Learning	தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	1	2023.03.27 முதல் 2023.05.09 வரை	வெளிநாடு
05	South Asian Regional Training Course on Evidence Based Policy Making for Decent Work (India)	உதவித் தொழில் ஆணையாளர்	1	2023.04.10 முதல் 2023.04.13 வரை	வெளிநாடு
06	Training Course on Cybersecurity Management Systems	தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	1	2023.04.03	இணையவழிப் பயிற்சி

07	Training Course on Leadership in Public Sector Organizations	பிரதித் தொழில் ஆணையாளர் மற்றும் உதவித் தொழில் ஆணையாளர்	3	2023.04.20	இணையவழிப் பயிற்சி
08	Terms of Reference Thailand Learning Visit : Sri Lanka From 30th May 2th June 2023	தொழில் ஆணையாளர் நாயகம்	1	2023.05.30 முதல் 2023.06.02 வரை	வெளிநாடு
09	Invitation to the Training Workshop on Public Finance Management for Social Protection, Vietnam	மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (நிர்வாகம்)	1	2023.06.06 முதல் 2023.06.09 வரை	வெளிநாடு
10	Occupation Safety and Health Management for Asian Countries, Malaysia	மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (பொறியியல்) மற்றும் மாவட்ட கைத்தொழிற்சாலைப ரிசோதகர் பொறியியலாளர	2	2023.10.09 முதல் 2023.10.20 வரை	வெளிநாடு
11	Womens' Leadership in Public Sector Organizations for Productivity enhancement , Indonesia	உதவித் தொழில் ஆணையாளர்	1	2023.09.27 முதல் 2023.09.28 வரை	வெளிநாடு
12	5th International Conference on Chemicals Management , Germany	பிரதித் தொழில் ஆணையாளர்	1	2023.09.25 முதல் 2023.09.29 வரை	வெளிநாடு
13	Tripartite Study tour to Indonesia on Social Protection	தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் தொழில் ஆணையாளர	2	2023.09.04 முதல் 2023.09.07 வரை	வெளிநாடு
14	TVET Capacity Building program for Government Officials and Vocational Trainers in Sri Lanka	தொழில் ஆணையாளர் நாயகம்	1	2023.10.31 முதல் 2023.11.08 வரை	வெளிநாடு
15	Sub – Regional High-Level Technical Meeting on Statistics of International Labour Migration in South Asia	உதவித் தொழில் ஆணையாளர்	1	2023.11.28 முதல் 2023.11.30 வரை	வெளிநாடு

ஏழாம் அத்தியாயம்

இணக்க அறிக்கை

இணக்க அறிக்கை

இல.	ஏற்புடையதாகக் கொள்ள வேண்டிய தேவை	இணக்க நிலை (இணங்குகின்றது/இணங்கவில்லை)	இணங்கவில்லையெனில் அது பற்றிய சுருக்கமான தெளிவுபடுத்தல்	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காக முன்மொழியப்படும் சரியான தீர்மானங்கள், நடவடிக்கைகள்
1	**பின்வரும் நிதிக்கூற்றுக்கள்- கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதிக்கூற்றுக்கள்	இணங்குகின்றது		
1.2	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு	இணங்குகின்றது		
1.3	வியாபார மற்றும் உற்பத்தி முற்பண கணக்குகள் (வணிக முற்பணக் கணக்குகள்)	ஏற்புடையதல்ல		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்குகள்	ஏற்புடையதல்ல		
1.5	விசேட முற்பணக் கணக்குகள்	ஏற்புடையதல்ல		
1.6	ஏனைய	ஏற்புடையதல்ல		
2	புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படுதல் (நி.பி.445)			
2.1	பொதுநிர்வாக சுற்றறிக்கைகளின் படி 267/ 2018 நிலையான வைப்புக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது	தற்போது 1978.12.19 ஆம் திகதிய திறைசேரி சுற்றறிக்கை இலக்கம் 842 இன்படி சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு தொகுதி (module) தயாரிக்கப்பட்டுள்ளதால்,	

			நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேட்டை பேணுவது கட்டாயமில்லை. அதன்படி, சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு தொகுதி (module) பேணப்படுகின்றது.	
2.2	ஆட்களுக்கான சம்பளப் பதிவேடுகள்/ ஆட்களுக்கான சம்பள அட்டைகள் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது		
2.3	கணக்காய்வு விசாரணை பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது		
2.5	மாதாந்த கணக்குச் சுருக்கங்கள் அனைத்தும் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்படுதல்	இணங்குகின்றது		
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது		
2.7	களஞ்சிய பொருட் பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது		
2.8	இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது		
2.9	சேத இழப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது		

2.10	பொறுப்புகள் பற்றிய பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது		
2.11	உப பத்திரங்கள் பற்றிய பதிவேடு (GA—N20) இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல்	இணங்குகின்றது		
03	நிதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பகிர்ந்தளிக்கப்படுதல் (நி.பி.135)			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்தில் சாட்டப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.2	நிதி அதிகாரங்கள் சாட்டப்படுதல் தொடர்பாக நிறுவனத்தில் விழிப்பூட்டல்களை மேற்கொண்டிருத்தல்	இணங்குகின்றது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக அங்கீகரிக்கப்படும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க சம்பள அட்டை மென்பொருள் பக்கேஜை பயன்படுத்தும்போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்	இணங்குகின்றது		
4	வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல்			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்	இணங்குகின்றது		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல்	இணங்குகின்றது		

4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தைத் தயாரித்தல்	இணங்குகின்றது		
4.4	வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு (NBD) குறித்த தினத்தில் சமர்ப்பித்தல்.	இணங்குகின்றது		
4.5	வருடாந்த நிதிப் பாய்ச்சல் கூற்று குறித்த திகதியில் திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
5	கணக்காய்வு விசாரணைகள்			
5.1	கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் வழங்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
6	உள்ளகக் கணக்காய்வு			
6.1	நி.பி.134(2) DMA/1-2019) இன் படி வருடத்தின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்.	இணங்குகின்றது		
6.2	ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்தில் பதில் வழங்கப்பட்டிருத்தல்	இணங்கவில்லை	சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் இருந்து பதில் வருவதில் ஒரு மாதத்திற்கும் மேலாக தாமதம் ஏற்பட்டிருத்தல்.	சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் அலுவலகங்கள் விழிப்பூட்டப்பட்டுள்ளன.
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		

7	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்			
7.1	DMA 2019 - 1 சுற்றறிக்கையின் படி ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 4 உரிய வருடத்தில் நடத்தப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
8	சொத்துக்களுக்கான முகாமைத்துவம்			
8.1	01/2017 ஆம் இலக்கமுடைய சொத்துக்களுக்கான முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் 07வது பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுதல் மற்றும் அகற்றப்படுதல் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.2	மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் இணைப்பாக்கம் செய்வதற்காகவும் பொருத்தமான அலுவலர் நியமிக்கப்பட்டு அவர் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் படி பொருட் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு உரிய அறிக்கைகள் குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
8.4	வருடாந்த பொருட் கணிப்பீட்டின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள் சுற்றறிக்கையில்	இணங்குகின்றது		

	குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.			
8.5	பாவனைக்கு உதவாத பொருட்களை அகற்றுதல் நி.பி.772 இன் படி மேற்கொள்ளப்படுதல்	இணங்குகின்றது		
9	வாகன முகாமைத்துவம்			
9.1	ஒதுக்கத்தின் வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல்.	இணங்குகின்றது (அரசாங்கத்தின் கணக்காய்வாளர் தலைமையதிபதி உரிய நாளாந்த ஓட்டக் குறிப்புகளை தேவைப்படும்போது கோருகையில் சமர்ப்பிக்குமாறு வாய்மொழியாக அறிவித்துள்ளார் என்பதுடன் அவை பட்டியலிடப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன)		
9.2	வாகனங்கள் பழுதடைந்து 06 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்பட்டிருத்தல்	இணக்கமில்லை	வுாகனங்களை அபுறப்படுத்தப்படுவதற்கு மோட்டார் வாகன பரிசோதனை அலவலர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டும் என்பதுடன் குழு நியமிக்கப்பட்டதன் பின்னர்	பாவிக்க முடியாதென முடிவு செய்த வாகனங்களை அவ்வாறு தீர்மானித்து 06 மாதங்களுக்கும் குறைவான ஓர் காலப்பகுதிக்குள் வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன

			வாகனங்கள் அப்புறப்படுத்துவதற்கு காலம் தேவையாகும்.	
9.3	வாகன லொக் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்	இணங்குகின்றது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்துத் தொடர்பாகவும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	இணங்குகின்றது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்கமுடைய பொதுநிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிதல் தொடர்பாக மீண்டும் பரிசோதித்தல்.	இணங்கவில்லை	2023 ஆகஸ்ட் மாதம் வரை எரிபொருள் ஞரழவய முறையை நடைமுறைப்படுத்தியதால், வாகனங்களில் உச்சமட்ட கொள்ளளவில் எரிபொருளை நிரப்புவதில் சிக்கல்கள் ஏற்படுதல் மற்றும் ஆண்டின் இறுதிக் காலாண்டில் எரிபொருளுக்காக கிடைத்திருந்த ஒதுக்கீடுகள் போதுமானதாக அமையவில்லை என்பதால் எரிபொருள் சமநிலை செயல்முறையை சகல வாகனங்களுக்கும் செய்ய முடியவில்லை. ஆயினும் ஒருசில மாவட்ட தொழில் அலுவலகங்களில் எரிபொருள் சமநிலை	

			நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.	
9.6	குத்தகை காலப்பகுதியின் பின்னர் வாகன பதிவு புத்தகங்களின் முழு உரிமையையும் சாட்டிக் கொண்டிருத்தல்.	இணங்குகின்றது		
10	வங்கிக் கணக்குகளுக்கான முகாமைத்துவம்			
10.1	குறித்த திகதியில் வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து உறுதிப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருத்தல்.	இணங்குகின்றது		
10.2	மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முந்திய வருடங்களிலிருந்து முன்னெடுத்து வரப்பட்ட செயலிழந்த வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தில்	இணங்குகின்றது		
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளியாகிய மற்றும் சீராக்கப்பட வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த நிலுவைகள் ஒரு மாத காலப்பகுதியில் சீராக்கப்படுதல்.	இணங்குகின்றது		
11	நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு			
11.1	வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் அவற்றின் எல்லை மீறப்படாத வகையில் செலவு செய்யப்படுதல்	இணங்குகின்றது		
11.2	நி.பி.94(1) பிரகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் வருடத்தின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் எல்லை விஞ்சிச் செல்லாத வகையில் பொறுப்புக்களை எட்டுதல்	இணங்குகின்றது		

12	அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்			
12.1	வரையறைகளுக்கு இசைவாக்கமடைதல்	இணங்குகின்றது		
12.2	நிலுவையிலுள்ள கடன் மீதி தொடர்பாக காலப்பகுப்பாய்வு செய்யப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலத்திலிருந்து வருகின்ற நிலுவையிலுள்ள கடன் மீதி தீர்க்கப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	• சில கடன் நிலுவைகள் தொடர்பான கோப்புகள் இல்லாமை • நிலுவைத்தொகையை வசூலிக்க வழக்குத் தொடுப்பதற்கு அரசாசங்கத்திற்கு ஏற்க நேரிடும் செலவுமீளப்பெற வேண்டிய தொகையை விட அதிகரித்துச் செல்வதால் வழக்குத் தாக்கல் செய்வது பயனற்ற செயற்பாடெனசட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்திருந்தமையினால் வழக்குத் தாக்கல் செய்ய முடியாமல் போனமை. • பிணையாளர்களின் விவரங்கள் இல்லாமை மற்றும் சில கடன் நிலுவைகளுக்கு பிணையாளர்கள் இல்லாமை. • மரணித்தஅலுவலர்களின்	• கடன் நிலுவையைத்தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு நினைவூட்டல்களை அனுப்புதல். • கடன் நிலுவைகளை தவணை முறையிலேனும் செலுத்துமாறு அலுவலர்களை விழிப்பூட்டல். • பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்தல். • வழக்குத் தாக்கல் செய்யநடவடிக்கை எடுத்தல். • முகவரிகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத அலுவலர்களின் முகவரிகளை பிரதேச செயலகங்கள் மற்றும் தேர்தல் திணைக்களத்தில் இருந்து உறுதிப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

			நிலுவைகளைமரணப் பணிக்கொடையிலிருந்து அறவிட்டுக்கொள்ள உரிய ஆவணங்களை மரபுரிமையாளர்கள் சமர்ப்பிக்காமை.	
13	பொது வைப்புக் கணக்கு			
13.1	காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி.571 இன் பிரகாரம் செயற்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
14	கட்டு நிதிக் கணக்கு			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் நிலுவை திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
14.2	நி.பி.371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தனிநோக்கப் பணி துணை கட்டு நிதியானது அப்பணி முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
14.3	நி.பி.371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையைக் கடந்து செல்லாத வகையில் தனிநோக்கப் பணி துணை கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
14.4	கட்டுநிதி கணக்கின் நிலுவையை திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்பிடுதல்	இணங்குகின்றது		
15	வருமானக் கணக்கு	திணைக்களத்திற்காக வருமானக்		

		கணக்கொன்று கிடையாது.		
15.1	உரிய ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக ஒன்றுதிரட்டப்பட்ட வருமானத்தில் மீளச் செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	ஏற்புடையதல்ல		
15.2	ஒன்றுதிரட்டப்பட்டிருந்த வருமான வைப்புக்கள் கணக்கில் வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதல்ல		
15.3	நி.பி.176 இன்படி நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதல்ல		
16	மனித வள முகாமைத்துவம்			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எல்லையில் பதவியணியைப் பேணிவருதல்	இணங்குகின்றது		
16.2	பதவியணியைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்தின் வாயிலாக வழங்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது (உரிய பிரிவுகள் மற்றும் அலுவலகங்களால் தயாரிக்கப்படுகின்றன)		
16.3	2017.09.20 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 2017/04 இன் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
17	பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்			
17.1	தகவல் அறிவதற்கான சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர்	இணங்குகின்றது		

	ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்குவதற்கான ஒரு பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்			
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் வலைதளம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதோடு வலைதளம் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக மக்களின் பாராட்டுக்களை/ குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கு வசதி வழங்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
17.3	தகவல் அறிவதற்கான சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணக்கமில்லை	RTI சட்டத்தின் கீழ் வேண்டு கோள்களுக்கு தகவல்கள் வழங்குதல் பிராந்திய அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகிறது. இதன்பிரகாரம தகவல்களைத் சேர்ப்பதற்கு காலவகாசம் எடுக்கப்பட்டது.	அனைத்து பிராந்திய அலுவலகங்களும் RTI சட்டத்தின் கீழ் மாதாந்தம் வழங்கிய தகவல்கள் பொருட்டு அறிக்கையை மாதாந்தம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்புவதென அறிவித்துள்ளன.
18	பிரஜைகள் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுதல்			
18.1	இலக்கம் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகளின் பிரகாரம் பிரஜைகள்/சேவைபெறுநர் சாசனமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்தியிருத்தல்	இணங்குகின்றது		
18.2	மேற்படி சுற்றறிக்கையின் 2.3பந்தியின் பிரகாரம் பிரஜைகள்/சேவைபெறுநர் சாசனத்தைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை	இணங்கவில்லை	முறையியலொன்று வரைவு செய்யப்பட்டுள்ளது.	

	மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியல் நிறுவனங்களால் தயாரிக்கப்படுதல்.			
19	மனித வளத் திட்டம் தயாரிக்கப்படுதல்			
19.1	2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 மாதிரியை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
19.2	புணியாள்தொகுதியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடமொன்றில் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பு மேற்படி மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
19.3	மேற்படி சுற்றறிக்கையின் இணைப்பு 01இல் தரப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பணியாள்தொகுதிக்கும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	2023.12.31 ஆம் திகதிய நிலவரப்படி, திணைக்களத்தின் 70 பதவிகளில் 2811 பணியாளர்கள் தலைமை அலுவலகப் பிரிவுகளிலும், நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள பிராந்திய அலுவலகங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர் என்பதோடு திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் படி அந்த அலுவலர்கள் அனைவருக்கும் செயலாற்றுகை	

			ஒப்பந்தங்களைத் தயாரிப்பது ஒரு சிக்கலான பணி என்பதால் அது மேற்கொள்ளப்படுவது எவ்வாறு என்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.	
19.4	மேற்படி சுற்றறிக்கையின் 6.5ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுதல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் பற்றிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
20	கணக்காய்வுப் பந்திகளுக்கு பதிலளித்தல்			
20.1	கடந்த வருடத்திற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		

இறுதி.